அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 24 | மே 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2054



## முள்ளிவாய்க்காலில் பசி தீர்த்த கஞ்சியும்

## வலிகள் சுமந்த இனம்

## முள்ளிவாய்க்காலில் தொலைந்தது!!

## மதத்தின் பெயரால் இனக்கருவறுப்பு



# வலிகள் சுமந்த இனம்

(முள்ளிவாய்க்கால் போரில் புதைக்கப்பட்ட
எம் தமிழினத்துக்கான நினைவேந்தல் இது - 2023.05.18)

முள்ளிவாய்க்கால் ஓர்
கிள்ளுகீரை என
அள்ளிச்சென்ற
இரண்டாயிரத்து ஒன்பது
இருண்ட யுகம்.
இன்னும் எங்களுக்கு...

பதினான்கு வருடங்கள் கடந்தும்
முள்ளிவாய்க்கால் சில்லுதரை
சொல்லியழுகிறது..
அப்பாவி தமிழர்களின்
அழுகுரல்களை...

முதுகெலும்புகள் முறிந்து விழ
ஆலமரங்கள் சாய்வது போல்
ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன
அழகான குடும்பங்களும்
அன்பு போர்த்த மனங்களும்...

வெறும் சடலங்களாக மிஞ்சியது
நந்திக்கடல் ஈரங்களும்,
யுத்த சத்தத்தில் பட்டு
தெறித்து எஞ்சியது
வட்டுவாகல் ஓரங்களும்..

முள்ளிவாய்க்கால்
சொல்லிக்கொடுத்த பாசத்தில்
இரத்த வெள்ளத்தில் மிதக்கும்
முகங்கள்
பூமிக்கு முத்தமிடும்
காட்சியதில்
காலனவன்
வெட்கித் தலை குனிகிறான்...
பூமிபாலம் உடைந்து
அள்ளிச்செல்கிறது
பிணங்களை..
வானைப் பிளக்கும்
மரண ஓலங்கள்
மாண்டு புதைந்த மாந்தர்கள்
வீரிட்டழுவது போல்
முக்காரமிடுகிறது..

உயிர் நீத்து வீழ்ந்து கிடக்கும்
சடலங்கள்
உயிர்தப்ப
எத்தனிக்கும் தன் உறவுகளுக்கு
முட்டுக்கொடுக்கிறது.
தப்பிச்செல்ல...

குண்டுகளுக்கு தன்
கண்கள் இரையானது
அறியாது
அலைமோதும் பிண நெரிசலில்
உயிரிழந்த
பல தந்தைகளில்
தன் தந்தை தேடி
தடவுகிறது குழந்தை..

பசிக்கு அழும்
பத்து மாதக் குழந்தை
இறந்து மடிந்து
ஈருடலாய் கிடக்கும்
தன் தாயின் மார்பகங்களின்
இரத்தத்தை புசிக்கிறது...

முள்ளியில் திரண்டிருந்த
வன்னி மக்களை
எண்ணித் துளைத்தது
முடிவிலா கொத்துக் குண்டுகள்.

தன் பசி தீர்க்க...
என் எழுதுகோல்
கண்ணீர் சிந்த எழுதப்பட்ட
இந்த
ஈரக்காவியம்
இலட்சக்கணக்கான
இழப்புகளை தந்த
முள்ளிவாய்க்காலின்
சாபத்தின் அந்தம்..

மாலினி

மாத இதழ் | மணம்: 24
மே
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| 01. ஆசிரியர் கருத்து... | 03 |
| 02. மதத்தின் பெயரால்... | 06 |
| 03. முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி... | 09 |
| 04. முள்ளிவாய்க்காலில் (கவிதை)... | 10 |
| 05. போராட்டமே தமிழர்க்கு.... | 11 |
| 06. முள்ளிவாய்க்காலில் பசிதீர்த்த... | 13 |
| 07. அறியாமை அகதிகள் .... | 16 |
| 08. இனப்படுகொலையும்... | 18 |
| 09. இனவாதமும் போதை... | 22 |
| 10. வெளிநாட்டு... | 27 |
| 11. சிறுவர்களை தேடிக் கொல்லும்.... | 29 |
| 12. படைப்பின் இலட்சியமே... | 31 |
| 13. தோழா!!! (கவிதை)... | 34 |
| 14. 'நல்ல தாய்' ... | 35 |
| 15. மதிப்பிற்குரிய.... | 37 |
| 16. குற்றுயிராய் (கவிதை)... | 39 |
| 17. வலை (தொடர் கதை)... | 42 |




## திருக்குறள்

**குறள் 294:**

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

**விளக்க உரை:**

ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால், அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் ஆவான்.












நாங்கள் எத்தகைய துன்பங்களைக் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மக்கள் மறக்கத் தொடங்கி விட்டனர். இந்த நேரத்தில் பூபதியம்மாவின் படத்தை அட்டையில் போட்டு அசத்தி விட்டீர்கள். சீரழிந்து கொண்டிருக்கும் இளைய சமுதாயம் வயதான காலத்திலும் தன்னை நாட்டுக்காக அர்ப்பணித்த ஒரு மூதாட்டியின் வரலாற்றைக் கேட்க வேண்டும்.

**மாணிக்கவாசகர்,**
**யாழ்ப்பாணம்**

எல்லோரும் ஒற்றுமையைப் பற்றியே பேசுகிறோம். ஒன்றாக நின்றால் எங்களுக்கு இவ்வளவு அழிவு வருமா? இனவாதிகளுக்கு ஒரு அச்சம் ஏற்படும் அல்லவா? ஆனால் பாருங்கள் நாங்கள் தெரிவுசெய்த பாராளுமன்ற உறுப்பினர்களே எத்தனை தில்லுமுல்லு செய்கிறார்கள். எல்லோரும் கூடித் தேரிழுப்போம் என்ற நம்பிக்கையே போய்விட்டது எனக்கு.

**மங்கையர்க்கரசி செல்லத்துரை**
**பிரான்ஸ்**

எழுநிலம் நல்லநல்ல, தரமான தகவல்களுடன் அருமையாக வந்து கொண்டிருக்கிறது. இது எல்லோருடைய கைகளையும் சென்றடைய ஆவன செய்யுங்கள். தாயகத்தில் எல்லா மக்களையும் சென்றடைந்தால் சிறப்பாக இருக்கும் என்பது எனது கருத்து. நாட்டில் நடக்கும் சீர்கேடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு புறம் திட்டமிட்டு அழிக்கும் இனவாதிகள்.

மறுபுறம் அதற்குத் துணைபோகும் புல்லுருவிகள். இளைய சமுதாயம் முழுமையாகச் சிதைந்து போகாமல் காப்பது புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களின் உதவியிலும் உள்ளது. எழுநிலம் நல்ல விழிப்புணர்வைப் பரப்புகிறது. தொடர்ந்து முயற்சியுங்கள்.

**ஊரவன்**
**தாயகம்**



# அக்கறை உறவுகள்

வெடுக்குநாறி மலைபற்றி இப்போது தான் நான் அறிகிறேன்.

என்னைப் போல எத்தனைபேர் தாயகத்தை முழுமையாகப் பார்க்காமல், தெரிந்து கொள்ளாமல் நாட்டைவிட்டு ஓடி வந்திருப்போம்? எங்களை ஓட ஓட விரட்டும் இனவாதிக்கு நாங்கள் ஒன்றாக நின்றால்தான் பதிலடி கொடுக்க முடியும்.

தாயகத்து செய்திகளைத் தாங்கி வரும் எழுநிலம் சிறப்பு. மேலும் மேலும் உங்கள் சேவைகள் தொடரட்டும்.

**அருணா சீனித்தம்பி**
**ஜேர்மனி.**




யாழில் நீர்ப்பிரச்சனை பற்றிய கட்டுரை அருமை. இவ்வளவு பிரச்சனைகளா? மலைப்பாக இருக்கிறது. இப்படி நான் யோசிக்கக்கூட இல்லை. எப்படி இதை சரிசெய்யப் போகிறோம்? இந்த விழிப்புணர்வு மக்களுக்கு தொடர்ந்து கிடைக்க தயவுசெய்து ஆவன செய்யுங்கள். இம்முறையும் கவிதைகள் குறைவாகவே வந்திருக்கிறது.

**கமலநாதன் நாகநாதன்**
**சிட்னி, அவுஸ்திரேலியா.**

ஆசிரியர் பக்கம் அந்தந்த நேரத்து தகவல்களை சரியான முறையில் அலசி ஆராய்கிறது. ஆசிரியருக்கு நன்றி. 'குரங்கும் குடியுரிமையும்' கட்டுரை கேலியாக இருந்தாலும் இதுதானே யதார்த்தம். குரங்குக்கு கொடுக்கும் முன்னுரிமை எமது மக்களுக்கு இல்லையே. பல்வேறு தகவல்களைத் தாங்கி இப்போது எழுநிலம் மெருகேறி வருவதாக எனக்குப் படுகிறது. வாழ்த்துகள்.

**விஜிதா நந்தகுமாரன்**
**நெதர்லாந்து.**

உலக வரலாற்றில் பெண்களின் உண்ணாவிரதப் போராட்டங்கள் பற்றிய கட்டுரை நன்று. தொகுத்துத் தந்தவருக்கு நன்றி. எங்கள் தேசத்திலும் இந்தியாவிலும் தான் இப்படியான அகிம்சைப் போராட்டங்கள் நடந்திருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தேன். அறிவுரை கூறும் குட்டிக் கதைகள் மிகவும் குறைவாக உள்ளன. கவனியுங்களேன். 'நான் வீழேன்' கவிதையும் 'பூபதியம்மா ஒரு வழிகாட்டி' கவிதையும் உயிரோட்டமாக இருந்தன.

**கிறிஸ்ரின் அலோசியஸ்**
**குடும்பத்தினர்**
**இங்கிலாந்து.**

'பட்டறிவு' குட்டிக்கதையும் 'முயற்சி' கவிதையும் எனக்குப் பிடித்திருந்தன. கட்டுரைகள் அனைத்திலும் ஒற்றுமையே பலம் என்ற கருத்து ஊடாடுவதைப் பார்க்க முடிகின்றது. உண்மைதான். ஒற்றுமையிழந்ததால் மட்டும் தான் இன்று நாதியற்று நிற்கின்றோம். யதார்த்தத்தை அப்பட்டமாக வெளிக்காட்டும் 'வலை' கதையின் வாசகி நான். அதில் வரும் பாத்திரங்கள் ஏதோ எங்களுக்குத் தெரிந்தவர்கள் போலவும், நாங்களே அந்தக் கதையில் வாழ்வது போலவும் தோன்றுகிறது. இது ஆசிரியருக்குக் கிடைக்கும் வெற்றி.

**பாமினி வரதராஜன்**
**மொன்றியல்**



# வலி சுமந்த நினைவுகள்

## ஆசிரியர் பக்கம்

பல தடைகளைக் கடந்து, மீண்டும் ஒரு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எமைக் கடந்து போயுள்ளது. இலட்சோப இலட்சம் மக்களையும் போராளிகளையும் விழுங்கிய இனப்படுகொலையின் வலியும் ரணமும் சற்றும் ஆறவில்லை. வருடங்கள் பதினான்கு கடந்தும் எமக்கான நீதி கிடைக்காமல் இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறோம் நாம்.

இரசாயனக் குண்டுகள், கொத்துக் குண்டுகள் என்று பல்வேறு வடிவங்களில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கான நீதி இன்னமும் கிடைக்கவில்லை. விசாரணையின் பின் விடுவிக்கப்படுவார்கள் என்ற உத்தரவாதத்துடன் பெற்றவர்களினால் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் நிலை என்ன என்பது இன்னமும் தெரியவில்லை. எதற்காக எம்மைக் குறிவைக்கிறார்கள் என்று தெரியாமலே அவயவங்களை இழந்த மக்களுக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை. தமது சொந்த நிலத்தில் மீண்டும் குடியேற முடியாமல் பல்லாயிரம் பேர் இன்னமும் அல்லல் படுகின்றனர்.

எமக்கான எந்த நீதியும் கிடைக்காத நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தினைக் குழப்புவதன் மூலம் இந்தப் பேரழிவை மக்கள் மனங்களில் இருந்து விலக்க முடியுமா என்ன? திட்டமிட்ட வகையில் இந்த மனிதப் பேரவலத்தை நிகழ்த்திய சிங்கள அரசு, தனது அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி நினைவேந்தல் நிகழ்வைத் தடுக்க படாதபாடு படுவதையும் இத்தனை வருடங்களாக நாங்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்.

முள்ளிவாய்க்காலிலும் யாழ் பல்கலைக்கழகத்திலும் கட்டப்பட்டிருந்த நினைவுத்தூபிகளை இரவோடிரவாகச் சிதைத்து வெறியாட்டம் ஆடியதையும் நாங்கள் மறந்து விடவில்லை. நினைவு வாரத்தின் முன்பே தடையுத்தரவு போட்டு மக்களைக் கைது செய்வதும், அந்த இடத்தில் மக்கள் ஒன்றுகூடி விளக்கு ஏற்ற விடாமல் இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் அந்தப் பிரதேசத்தைப் பூட்டி வைப்பதுமாக இறந்தவர்களை நினைவுகூரத் தடைவிதிக்கும் அதே இலங்கை அரசு, எம் மக்களிற்கான காவலன் நானே என வெளியுலகிற்கும் வேசம் போடுகிறது.

நல்லிணக்கம் மற்றும் மீளிணைப்பை வெளிக்காட்டும் வகையில், மறைந்த போராளிகளுக்கும், பொதுமக்களிற்கும் மற்றும் உயிர்நீத்த முப்படையினர், பொலிஸ் அலுவலர்கள் ஆகியோருக்கும் கொழும்பில் ஒரு பொது நினைவுத்தூபி அமைக்கப்படும் என்ற சனாதிபதியின் அறிவிப்பும் வெளியுலகிற்காக போடப்படும் ஒரு வேடம்தான்.

மக்கள் படுகொலைக்கு காரணமாக இருந்தவர்களே அவர்களுக்கு நினைவுத்தூபி, அதுவும் தலைநகரில் எழுப்பப் போகிறார்களாம். அதுவும் கொன்றவர்கள், கொல்லப்பட்டவர்கள் எல்லோருக்கும் பொதுவாக. தாங்கள் படுகொலை செய்ததை ஏற்றுக் கொள்ளாத அரசு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலையைத் தெரிவிக்க முடியாத ஒரு அரசு, இறந்தவர்களுக்கு நினைவேந்தல் செய்யத் தடை விதிக்கும் அரசு, விளக்கு ஏற்றுவதையும் கஞ்சி உண்பதையும் வீட்டினுள் இருந்தே செய்யுங்கள் என ஈவிரக்கமின்றிக் கூறும் ஒரு அரசு நினைவுத்தூபி கட்டி மரியாதை செலுத்தப் போகிறதாம்.

இதே அரசுதான் அத்தனை துயிலுமில்லங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கியது. நினைவாலயங்கள், மண்டபங்கள், நடுகற்கள், தூபிகள் என்று அனைத்தையும் அழித்துச் சிதைத்தது. இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் அடிப்படை உரிமைகளையும் தர மறுக்கிறது.

இனப்பிரச்சனைக்கு சரியான ஒரு தீர்வைத் தந்திருந்தால் இவ்வளவு மரணங்கள் ஏற்பட்டிருக்குமா? திட்டமிட்ட ஒரு இன அழிப்பு நடவடிக்கையின் விளைவாக இத்தனை லட்சம் உயிர்களைக் காவு வாங்கியவர்கள் பொறுப்புக் கூறாமல் தப்பிக்க முடியாது.

எமது மக்களுக்கு சொல்லொணாத் துன்பங்களை வழங்கியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். கொல்லப்பட்டவர்களையும் கொன்றவர்களையும் ஒன்றாக நினைவுகூரும் நினைவுத்தூபி கட்ட அமைச்சரவை கொடுத்த அனுமதியானது கொலைகாரர் தப்பிப்பதற்குச் செய்யப்பட்ட யுக்தி. தமிழினத்தின் சார்பாக இதனை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம்.

நல்லிணக்கம், மீளிணைப்பு என்பனவற்றை வெளிக்காட்ட வேண்டுமென்றால் இனப்படுகொலை செய்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவாருங்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குங்கள். அரசியற் கைதிகள் என்ற போர்வையில் விசாரணை எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல்லாயிரம் தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யுங்கள். பறிக்கப்பட்ட நிலங்களையும் அவர்கள் வணக்கத் தலங்களையும் மீண்டும் அவர்களிடமே கையளியுங்கள்.

மொத்தத்தில், அடிப்படை உரிமைகளைக்கூட வழங்காது துன்புறுத்துவதை நிறுத்தி எம் மக்களை வாழ விடுங்கள். இவை எவற்றையும் செய்யும் எண்ணம் துளிகூட இல்லாமல், இனிக்கப் பேசி முதுகில் குத்தும் இனவாதிகளை தமிழினம் என்றும் மன்னிக்கப் போவதில்லை.

பாரி



# மதத்தின் பெயரால் இனக்கருவறுப்பு

போர் முடிவடைந்து விட்டது என்ற சிங்கள அரசின் அறைகூவல், விமானத் தாக்குதல்கள், குண்டு வெடிப்புகள், ஷெல்லடிகள், துப்பாக்கிச் சூடுகள் என்று தமிழ் மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொல்லும் சந்தர்ப்பத்தை இனவாதிகளிடமிருந்து பறித்துவிட்டது. எனினும் இனவழிப்பு நிறுத்தப்பட்டு விட்டது என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. வடிவங்கள் மாற்றப்பட்டு அது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.



இனவழிப்பை புதிய புதிய வடிவங்களில் அரங்கேற்றி, இலங்கையை சிங்கள பௌத்த நாடாக மட்டும் ஆக்குவதே குறிக்கோளாக இயங்கி வருகிறது அரசு. தமிழர் தாயகப்பகுதியில் தமிழ்க் குடிகளின் இனப் பரம்பலைக் குறைத்து, 'தமிழர் தாயகம்' என்ற கோட்பாட்டை அழிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளது அது. தமிழர் பிரதேசத்தில் இராணுவ உதவியுடன் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ச்சியாக உருவாக்கப்படுகின்றன.

இலங்கையின் தொல்லியல் திணைக்களம் 'சிறிலங்கா முழுக்க முழுக்க ஒரு சிங்கள பௌத்த நாடு' என்ற கொள்கையுடன் இயங்குவதால், ஏக்கர் கணக்கான தமிழர் காணிகள், தொன்மை வாய்ந்த புராதனக் கோவில்கள், சிறப்பு வாய்ந்த நிலப்பரப்புகள், முக்கியமான உயர்ந்த நிலப்பரப்புகள் என்பன இலங்கை தொல்லியல் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன. அந்த இடங்களினுள் மக்கள் நுழைய அனுமதி மறுக்கப்படுகிறது.

தமிழர் தொன்மையான குடிகள் என்பதற்கான சான்றுகளான கல்வெட்டுகள், எச்சங்கள், புராதன சின்னங்கள், சிலைகள், வடிகால்கள், தூபிகள், மண்டபங்கள், போன்ற அத்தனையும் இங்கு அழிக்கப்படுகின்றன. அந்த இடங்களில் சிங்களர்களே வாழ்ந்தார்கள் என்று நிறுவுவதற்காக போலியான ஆதாரங்கள் வைக்கப்படுகின்றன.

கடந்த சில வருடங்களாக, ஆதிகாலத்தில் தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் பரவலாக 'தமிழ்ப் பௌத்தம்' இருந்தது என்று நிறுவுவதற்கு பிரயத்தனப் படுகின்றனர் இவர்கள். தமிழர் வரலாற்றுச்



சின்னங்கள் அழிக்கப்பட்டு அந்த இடங்களில் பௌத்த விகாரைகள் எழுப்பப்படுகின்றன.

புகழ்பூத்த சைவத்தலங்கள் கூட தொல்லியல் ஆராய்ச்சி என்ற பெயரில் மூடப்பட்டு, அங்கு அகழ்வின்போது பௌத்தம் இருந்ததற்கான சின்னங்கள் கிடைத்ததாக நிரூபிக்கப்படுகிறது. மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் அவர்களின் அனுமதி இல்லாமலே பிடுங்கப்பட்டு, அவற்றில் விகாரைகள் கட்டப்படுகின்றன. அதே சமயத்தில் முகம் தெரியாதவர்களால் சைவக் கோவில்கள் அடித்து நொருக்கப்படுகின்றன, விக்கிரகங்கள் சிதைக்கப்படுகின்றன.

தமிழ்த்தரப்புக்கு நியாயம் கிடைப்பதற்காக பேச்சுவார்த்தை நடத்துகிறோம் என்று சொல்லும் அதே நேரம் அருண் சித்தார்த் போன்ற புல்லுருவிகளை வைத்து பௌத்த மயமாக்கலை நியாயப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவப் புலனாய்வாளர்கள் தொடர்ந்தும் ஈடுபடுகிறார்கள்.

இன, மத பாகுபாடுகளைக் கடந்து இலங்கையின் வரலாற்றைப் பேணுவது தான் தொல்லியல் திணைக்களத்தின் முக்கிய இலக்கு என்று அரசின் அதிகாரத்தில் இருப்பவர்கள் அடிக்கடி அறிக்கைகள் விடுகிறார்கள். அது பெரும்பான்மை சிங்களவருக்காக மட்டுமே செயற்படுவதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

இனத் துவேசத்துடன் தீட்டப்பட்ட சட்டங்கள் பெரும்பான்மையினர் பக்கம்தான் வளையும். சமயங்களில் நீதிமன்று நியாயமான தீர்ப்பைச் சொன்னாலும், சட்டம் மீறப்பட்டு பௌத்தம் மட்டுமே பாதுகாக்கப்படும் என்பதற்கு குருந்தனூர் மலை விவகாரத்தில் நீதிமன்ற ஆணை மீறப்பட்டதும், மீறப்பட்டமைக்காக எந்தத் தண்டனையும் கொடுக்க முடியவில்லை என்பதும் சான்றாக அமைகின்றன.

**“வாழ வக்கற்று பிற நாடுகளிடம் பிச்சைப் பாத்திரம் ஏந்தும் சிறிலங்காவில், குறிப்பாக தமிழர் தாயகப் பிரதேசத்தில், கண்மூடித் திறப்பதற்குள் விகாரைகள் முளைப்பதும், அவை கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுவதும் நாளாந்த நிகழ்வாகி விட்டன. இவற்றிற்கான பணம் எங்கிருந்து கிடைக்கிறது? சைவ, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் தமிழர் தாயகப் பரப்பில் விகாரைகளுக்கு என்ன வேலை?”**



வாழ வக்கற்று பிற நாடுகளிடம் பிச்சைப் பாத்திரம் ஏந்தும் சிறிலங்காவில், குறிப்பாக தமிழர் தாயகப் பிரதேசத்தில், கண்மூடித் திறப்பதற்குள் விகாரைகள் முளைப்பதும், அவை கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுவதும் நாளாந்த நிகழ்வாகி விட்டன. இவற்றிற்கான பணம் எங்கிருந்து கிடைக்கிறது? சைவ, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் தமிழர் தாயகப் பரப்பில் விகாரைகளுக்கு என்ன வேலை?

இராணுவத்தினரின் வழிபாட்டுக்காகக் கட்டப்படுகிறது என்று காரணம் சொல்லப்படுகிறது. போர் முடிவடைந்த பின் இராணுவத்தினருக்கு இங்கு என்ன வேலை? இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்தப்பட்டு கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம். இதில், விகாரைகளுக்கு என்ன தேவை?

போரில் கொல்லப்பட்டவர்களிற்கான நினைவேந்தலை வீட்டினுள் இருந்தபடியே செய்யட்டும், வீட்டில் விளக்கேற்றட்டும், கஞ்சி காய்ச்சட்டும் என்று திமிருடன் அறிக்கை விடுகிறார்கள் அரச அதிகாரத்தில் இருப்பவர்கள். அப்படியிருக்க வணங்குதல்களையும் ஏன் இராணுவ கூடாரங்களினுள் செய்யக் கூடாது?

எங்களது அடிப்படைச் சுதந்திரமான எந்த மதத்தை வணங்குவது என்ற உரிமைகூட இந்த நாட்டில் மறுதலிக்கப்படுகிறது. விகாரைகள் கட்டுவதற்கு எதிராக கோசம் போடுவது, போராட்டம் நடத்துவது, விகாரைகளில் விழாக்கள் நடைபெறுவதற்குத் தடையாக இருப்பது என்பன தண்டனைக்குரிய குற்றம் என்கிறது நீதிமன்றத் தீர்ப்பு. அரசும் அரச எந்திரமும் மறைமுகமாக மதக்கலவரத்தை உண்டுபண்ணும் வேலையை கச்சிதமாகச் செய்கின்றன.

இதன் ஒரு பகுதியாகத்தான் தையிட்டியில் அத்துமீறி அபகரிக்கப்பட்ட காணியில் விகாரையும் தூபியும் கட்டி திறப்புவிழா செய்தவர்கள் பக்கம் – சட்டவிரோத கட்டுமானங்களுக்கு சார்பாக – நின்று நியாயம் கேட்டவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. சட்டவிரோத கட்டுமானங்களுக்கும், வழிபாட்டுக்கும் குந்தகம் விளைவிக்காமல் ஓரமாக நின்று கோசம் போடுமாறு பாடம் நடத்தும் நீதிமன்றங்கள் இந்த நாட்டில் என்ன நியாயமான தீர்ப்பை எமது மக்களுக்கு வழங்கிவிடப் போகின்றன? தனியார் காணியில் நின்று போராட்டம் நடத்தியவர்களை காவற்துறையினர் வலுக்கட்டாயமாகத் தூக்கிச் சென்றதுகூட நீதிமன்றின் கண்களில் குற்றமாகத் தெரியவில்லை.

கீரிமலை சிவன் ஆலயம், சடையம்மா மடம், முருகன் கோவில் என்பன அழிக்கப்பட்டு அங்கு சனாதிபதி மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. காங்கேசன்துறையில்



சைவக் கோவிலும் அதன் சூழலும் அழிக்கப்பட்டு கெமுனு விகாரை எழுந்துள்ளது. வெடுக்குநாறி மலையில் ஆதி சிவன் கோவில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. குருந்தூர் மலையில் நீதிமன்ற உத்தரவையும் மீறி விகாரை கட்டப்பட்டு விட்டது. வவுனியா பூவரசங்குளத்தில் பிள்ளையார் விக்கிரகங்கள், சூலம் என்பன சிதைக்கப் பட்டிருக்கின்றன.

திருகோணமலை குஞ்சுமப் பெரியசாமி கோவில் அடித்து நொருக்கப்பட்டு விட்டது. திருமலைஸ்ரீமலை நீலியம்மன் கோவில் அழிக்கப்பட்டு விட்டது. மட்டு குசலமலை சைவக் குமரன் ஆலய சிற்பங்கள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. முல்லை செம்மலையிலுள்ள நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் எதிர்ப்பையும் மீறி பிக்கு ஒருவருக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்றுள்ளன. வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தனியார் காணிகளில் விகாரைகள் கட்டப்படுகின்றன. உருத்திரபுரம் சிவன் ஆலயத்தின் 2400 ஆண்டுகள் பழமையான சிவ வழிபாட்டை எடுத்துச் சொல்லும் ஆவுடை லிங்கங்களும், சூலங்களும், மட்பாண்டங்களும், சுடுமண் உருவங்களும் தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் தனிமைப்படுத்தப்பட்டு, பௌத்த மயமாக்கத் தயாராக்கப்படுகின்றன. திருகோணமலையின் அரிசிமலைப் பிரதேசம் விகாரைகளும், காணி அபகரிப்புகளுமாக முற்று முழுதான பௌத்த மயமாக்கலை எதிர் கொண்டுள்ளது. இவை எவற்றிற்கும் எந்த விசாரணைகளும் நடத்தப்படவும் இல்லை யாரும் கைது செய்யப்படவும் இல்லை. இந்தப் பட்டியல் தொடர்ந்து கொண்டே செல்லும்.

மறுபுறம், பொய்களின் மொத்த உருவமாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, ஒரு சனாதிபதியாக அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவியுங்கள் என்று நான் எவ்வாறு உத்தரவிட முடியும் என்று தமிழரசுக் கட்சியினரிடம் கேள்வி எழுப்பியுள்ளார். இதே ரணில் எதிர்க்கட்சித் தலைவராக, காணிகளை விடுவித்தல் தொடர்பான போராட்டத்தில் 2013 இல் கலந்து கொண்டிருந்தார். அப்போது தெல்லிப்பழை ஆலய வாசலில் நின்று பறிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று முழங்கியவர் அவர். தட்டிக் கேட்க எவருமற்று நாதியற்று நிற்கிறது தமிழினம். நாங்கள்தான் எங்களுக்காக பேசவேண்டும்.

தனித்தனியாக நின்று குரல் கொடுக்காமல் ஒருமித்து நின்று போராடினால் அன்றி எங்களால் எமது மண்ணைத் தக்க வைக்க முடியாது. புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்கள் தத்தமது நாடுகளிற்கு இந்தப் பிரச்சனைகளை எடுத்துச் சென்று இலங்கை அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த வேண்டும். மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களே இப்போது எங்களின் தலையாய தேவை.

**“தையிட்டியில் அத்துமீறி அபகரிக்கப்பட்ட காணியில் விகாரையும் தூபியும் கட்டி திறப்புவிழா செய்தவர்கள் பக்கம் – சட்டவிரோத கட்டுமானங்களுக்கு சார்பாக – நின்று நியாயம் கேட்டவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. சட்டவிரோத கட்டுமானங்களுக்கும், வழிபாட்டுக்கும் குந்தகம் விளைவிக்காமல் ஓரமாக நின்று கோசம் போடுமாறு பாடம் நடத்தும் நீதிமன்றங்கள் இந்த நாட்டில் என்ன நியாயமான தீர்ப்பை எமது மக்களுக்கு வழங்கிவிடப் போகின்றன? தனியார் காணியில் நின்று போராட்டம் நடத்தியவர்களை காவற்துறையினர் வலுக்கட்டாயமாகத் தூக்கிச் சென்றதுகூட நீதிமன்றின் கண்களில் குற்றமாகத் தெரியவில்லை.”**





# முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி!!

சிவரஞ்சனி

2009 இல் ஈழத்தமிழர்கள் மீது ஒரு இனப்படுகொலையை சிங்கள இனவெறி அரசு செய்து முடித்தது.

150,000 பேர் இந்த இனப்படுகொலையில் கொல்லப்பட்டார்கள்.

கொடிய விசவாயு குண்டுகளை பயன்படுத்தி ஓர் இன அழிப்பு நடத்தப்பட்டது.

குழந்தைகள் குறிவைத்து அழிக்கப்பட்டனர். இதை சர்வதேச சமூகம் கைக்கட்டி, வாய்பொத்தி வேடிக்கை பார்த்தது.

10 கோடி தமிழர்கள் உள்ள இந்த உலகில் ஈழத்தமிழர்கள் மீதான இனப் படுகொலையைத் தடுக்க, ஒரு நாடும் உதவ முன்வரவில்லை.

நாம் இந்தியர்கள். நம் நாடு இந்தியா. நமது நாடு மிகப்பெரிய நாடு.. என்று 70 ஆண்டு காலமாக குழந்தைப் பருவம் முதல் சொல்லிச் சொல்லி வளர்க்கப்பட்டோம். ஆனால், அந்த இந்தியாவும் இனப் படுகொலையைத் தடுக்கவில்லை. மாறாக துணை நின்றது.

'தீர்மானம்' போட்டதைத் தவிர, 7 கோடி தமிழர்களைக் கொண்ட தமிழ்நாட்டு அரசாலும் எதையும் செய்ய முடியவில்லை. எங்களாலும் ஒன்றும் செய்ய முடியாது, நாங்களும் அடிமைகள் தான் என்றார்கள் இங்கு அதிகாரத்தில் இருந்தவர்கள்.

தமிழ்நாட்டு மக்களாகிய நாம் நம் தொப்புள் கொடி உறவுகள் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்வதைக் கண்டு கத்தினோம். கதறினோம். கண்ணீர் மல்கத் துடிதுடித்தோம். எவன் காதுகளுக்கும் கேட்கவில்லை.

2009 மே18 இல் முடிந்தது முள்ளிவாய்க்கால் யுத்தம். குருதி நின்றது. நாடி அடங்கியது. ஆனால். மாண்டவர்களின் ஆன்மா மட்டும் விடுதலைக் காற்றை சுவாசிக்க இன்றும் துடியாய்த் துடிக்கிறது.

முள்ளிவாய்க்கால் முடிவல்ல..!

தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழ ஒரு தேசம் வேண்டும் என்பதும் குற்றமல்ல..!!

விடுதலை வேண்டும்.. அதை நாம்தான் பெறவேண்டும்.





# முள்ளிவாய்க்காலில் தொலைந்தது!!

முள்ளிவாய்க்கால் மண்ணில்
முழுவதும் தொலைந்து போக
குற்றுயிரும் குலையுருமாக
நாதியற்று அன்று நாம்
நின்றோமே.!!

வீரமே உருவான எம் மண்.
மீண்டும் மூன்று தசாப்த
காலம் கடந்து.
உலகத்தின்
ஒருமித்த சூழ்ச்சி
வலைப்பின்னலில்
சிக்கி.
இனவெறி அரசின்
கோரத் தாண்டவத்தில்.
இழந்தோமே
எம் தேசத்தை..!!

பசுமை நிறைந்த
சோலை வனமான நம் பூமி..
கொடியவர் பொழிந்த
குண்டுமழையில் சிக்கி,
சுடுகாடாய் மாறியதே!
சுதந்திர காற்றினை
சுவாசித்த எம் தேசம்
துரோகத்தின் உச்சத்தால்
சாம்பல் மேடானதே!!

ஒரு பிடி சோற்றுக்காய்
பசித்த வயிற்றுடன்
கஞ்சிக்காய் காத்திருந்த
பொழுதுகளில்.
வீழ்ந்த எறிகணையில்
உடல் சிதறி பலியாக
புதைத்திடவும் வழியின்றி
நாதியற்று நின்றோமே!!

எடுத்து இயம்பிட முடியா
கோரத் தாண்டவமாடி
மக்களுக்கான யுத்தமென
வாய் கூசாமல் செப்பிட
எப்படி முடிகிறது?

பதினான்கு ஆண்டுகள்
கடந்தும் நீதிக்கான
எம் குரல்கள்
யார் செவியிலும்
விழவில்லை..
எம் உணர்வுகள்
மாறவேயில்லை..!!

உயிர்ப் பலியான அத்துணை
ஆன்மாக்களின்
கூக்குரல் ஓலம்
எப்போதும் காதில்
ஒலிக்கும்
விலங்கினை சுமக்கும்
தமிழீழ அன்னையவள்
மீண்டும் எழுவாள்!!
மீண்டும் வருவாள்!!
மீண்டு வருவாள்!!

அம்முக்குட்டி




# போராட்டமே தமிழர்க்கு தீர்வைத் தரும்!

இலங்கையில் 1990களில் இருந்து, 2014 வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயிருக்கின்றார்கள். இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டு இத்தனை வருடங்கள் கடந்து போன நிலையிலும், இதுவரை ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகள் அவர்களின் உறவுகளைக் குறித்தோ, காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் குறித்தோ அக்கறை செலுத்தவில்லை.

கடந்து வந்த அரசாங்கங்கள் அனைத்தும் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்ற ஒரு செயற்பாட்டை தான் இவர்கள் விவகாரத்தில் செய்து வருகின்றன. இது இவ்வாறிருக்க இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் மூலம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி செயலக பணிக் குழுவின் தலைவரும் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பான ஆலோசகருமான சாகல ரத்நாயக்கயாழில் தெரிவித்துள்ளார்.






புனிதப்ரியா பன்னீர்செல்வம்

இவருடைய இந்த கருத்தை சமூக ஆர்வலர்கள் இது எதிர்வரும் தேர்தலுக்காக அரசாங்கம் போடும் நாடகத்தின் ஒரு அங்கம் எனவும் இது கேலிக்கூத்து எனவும் கடுமையாக விமர்சித்துள்ளனர். இத்தனை வருட காலம் சிங்கள பேரினவாத அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள் மீது ஏற்படாத கரிசனை இப்போது எதற்காக வர வேண்டும்? தமிழர்களையும் அவர்களின் இன அடையாளங்களையும் பல்வேறு வழிகளிலும் அழித்து வரும் கேடு கெட்ட பேரினவாத அரசியல்வாதிகளா தமிழ் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்று கொடுக்க போகிறார்கள்?

மேலும் நாடு அதள பாதாளத்தில் இருக்கின்றது எனவும், புலம்பெயர் அமைப்புகள் இலங்கையில் முதலீடு செய்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் எனவும் சகல



யாழ் மக்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார் அவர். அதாவது நாட்டின் வளமான எதிர்காலத்திற்கு புலம்பெயர் தமிழர்கள் உதவிக்கரம் நீட்டினால் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தீர்வு பெற்று கொடுக்கப்படும் என்று மறைமுகமாக பொருள் படுகிறது.

அரசாங்கம் தனது அரசியல் காய் நகர்த்தல்களை இவ்வண்ணமாய் மேற்கொள்கின்றது. மக்களை ஏமாற்றி அரசியல் பிழைப்பு நடத்தவே அரசாங்கம் மக்களின் இயலாமையை கையிலெடுத்துள்ளது என்பது இதன் ஊடாக தெள்ளத் தெளிவாக தெரிகின்றது.

வறிய மக்களுக்கு 10 கிலோ அரிசியை கொடுத்து விட்டால் அவர்களது பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைத்து விடுமா? இத்தனை ஆண்டு காலம் அவர்கள் இழந்து போன எல்லாவற்றையும் பெற்று விட முடியுமா? எத்தனை துன்பங்கள் எத்தனை இழப்புக்களை இந்த வடக்கு, கிழக்கு மக்கள் சந்தித்துள்ளனர்? இவற்றுக்கு ஒரே தீர்வு தான். அதாவது போர்க் குற்றவாளிகள் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் தண்டிக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படாத பட்சத்தில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் குறைவதற்கு எந்த வகையிலும் வாய்ப்பில்லை.

காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்களா அல்லது வேறு ஏதாவதா என்பதனை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாகக் கூற வேண்டும். அவ்வாறு இலங்கை அரசாங்கம் இதனை திட்டவட்டமாக கூறும் பட்சத்தில், பல வருடங்களாக போராட்டங்களில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு ஏதோ ஒரு முடிவு தெரியவரும். போராட்டங்களை முன்னெடுத்த காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோரில் பலர், இப்போது உயிரிழுந்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை அழைத்து, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பது தொடர்பில் பேசுவதற்கு இதுவரை முன்வராத அரசாங்கமா இனிமேலும் அவர்களுக்கு நீதியை வழங்க போகின்றது. இது அத்தனையும் அரசாங்கத்தின் கண் துடைப்பு நாடகம்.

இறுதி யுத்தத்தில் கண்கண்ட சாட்சியாக ஒப்படைக்கப் பட்டவர்களுக்கு அரசாங்கம் மரண சான்றிதழ் வழங்குவதென்றால், கைது செய்யப்பட்ட அனைவரும் கொலை செய்யப்பட்டார்களா? என்ற ஒரு கேள்வி இன்னும் மக்கள் மத்தியில் எழுந்து கொண்டு தான் இருக்கின்றது. அத்துடன், அனைத்து கொலைகளையும் அரசாங்கமே செய்து விட்டு, அது தொடர்பில் அரசாங்கமே விசாரணை நடத்துவது என்றால், அதில் என்ன நியாயம் உள்ளது.

எனவே தான் பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச விசாரணை வேண்டும் கோருகின்றனர். ஆனால் அரசாங்கம் குற்றவாளிகளை காலம் காலமாக காப்பாற்றி கொண்டு வருவது மட்டுமல்லாது தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் துரோகத்தை தான் செய்து வருகின்றது. இப்படி மக்களுக்கு துரோகம் செய்யும் பேரினவாத அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது என்பதை வேடிக்கையாக தான் உள்ளது.

தொடர்ந்தும் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் அரசின் அரசியல் தந்திரத்திற்கு ஏமாறாமல் தமக்கான நீதி கிடைக்க ஒன்றிணைந்து போராடுவதே சாலச்சிறந்தது.

“இறுதி யுத்தத்தில் கண்கண்ட சாட்சியாக ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் மரண சான்றிதழ் வழங்குவதென்றால், கைது செய்யப்பட்ட அனைவரும் கொலை செய்யப்பட்டார்களா? என்ற ஒரு கேள்வி இன்னும் மக்கள் மத்தியில் எழுந்து கொண்டு தான் இருக்கின்றது. அத்துடன், அனைத்து கொலைகளையும் அரசாங்கமே செய்து விட்டு, அது தொடர்பில் அரசாங்கமே விசாரணை நடத்துவது என்றால், அதில் என்ன நியாயம் உள்ளது.”





நவீனன்

# முள்ளிவாய்க்காலில் பசி தீர்த்த கஞ்சியும்

## சோழர்களின் கூழ்வார்க்கும் வாழ்வும்

நந்திக்கடலின் இருபுறமும் பெருந்திரளாக வந்த மக்கள் கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்ட துயரம் ஒருபுறம், மிச்ச மிருக்கும் உயிரைக் காக்க மறுபுறம் இடையில் பட்டினியால் தகித்துக் கொண்டிருந்த மக்களுக்கு தேவாமிர்தமாக இறுதி நாட்க ளில் இருந்தது தான் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி.

முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது ஒரு தமிழர்களின் குறியீட்டு உணவு. அதன் அடையாள வழி, எங்கள் மீது நிகழ்ந்தப்பட்ட கொடூர இனவழிப்பு நிகழ்வை, இனிவரும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு உணர்த்த வேண்டும்.

ஈழத்தில் ‘மே 18’ என்கிற உணர்வு விசேட உணவாக இருக்க வேண்டும். ஆண்டுக்கொரு முறை செய்யப்படுகிற அருமருந்தாக அது இருத்தல் வேண்டும். எல்லோரும் கூடுகிற இடங்கள் என்றில்லாமல், எங்கும், எவரும், அந்நாளில் அதைச் செய்து உண்ண வேண்டும். அந்த நாளின் அடையாளமாக அது அன்றைய நாளின் வீட்டுணவாகவும் இருக்க வேண்டும்.

### மே 18 - முள்ளிவாய்க்கால் கஞ்சி :

மிகக்குறைந்தளவிலான அரிசி, நெல், தண்ணீர் என்கிற இந்த மூன்று பொருட்களாலானதே முள்ளிவாய்க்கால் கஞ்சியாக போர்க் களத்தில் தயாரிக்கப்பட்டது.

முக்கியமாக உப்பு, பால் என்பவை அறவே அற்றவையானதாகவே முள்ளிவாய்க்கால் கஞ்சி இருக்க வேண்டும். அப்படித் தான் அது அன்றைய நாளில் இருந்தது. சுவையற்ற நீருணவு அது. ஒரு லீற்றர் தண்ணீரில் அதிகமாக நூறு கிராம் அரிசியைக் கொண்டதாக அது இருந்திருக்கலாம். அப்படித் தான் அது தயாரிக்கப்பட்டது.

உணவு என்பதற்கு மேலாக, அந்த நாளின் பெறுமதியும், அதன் நோக்கமும் புரியும் வகையில் அதை நாம் தயாரித்துப் பரிமாற வேண்டும். இதன் மூலமே முள்ளிவாய்க்கால் கஞ்சி என்கிற வரலாற்று அடையாளத்தை நாம் பேணலாம்.



### சோழர்களின் கூழ்வார்க்கும் விழா:

இந்தியாவில் காலனித்துவ ஆட்சியில் உருவாக்கப்பட்ட பட்டினிச் சாவுகள் எண்ணிலடங்காதவை. ஆங்கிலேயர்களும் உணவை ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தியதற்கும் சான்றுகள் பல உண்டு.

ஆங்கிலேய ஆட்சியின்போது திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பெரும் பஞ்சத்திற்கு சோழமண்டல பகுதிகளில் பட்டினிச்சாவு தலை விரித்தாடியது. அப்போது கம்பு, கேப்பை போன்ற தானியங்களை பயன்படுத்தி கூழாக மக்களுக்கு வழங்கப்பட்ட துயரத்தின் நீட்சியை பண்பாட்டு வழிநின்று ஆடிமாதங்களில் 'கூழ்வார்க்கும் விழா' பல பகுதிகளில் நடந்து வருகிறது.

வரலாற்றில் மனித இனம் தோன்றியதிலிருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது.

காலனித்துவ வரலாற்றின் கொடுமைகள் இன்னமும் ஏதோ ஓர் வகையில் தொடர்கிறது. இவையெல்லாம் மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வரலாற்றின் துயரமாக பார்க்கலாம்.

### கஞ்சியும் எதிர்கால தலைமுறையும்:

வரலாற்றின் வழி நின்று, 'இனப்படுகொலை நினைவேந்தல்' நாட்களில் தமிழ்ச்சமூகம் நிச்சயமாக 'முள்ளிவாய்க்கால் கஞ்சியை' தங்கள் வீடுகளில் செய்து நாம் நம் அடுத்த தலைமுறைகளுக்கு துயரம் தோய்ந்த நாட்களை நினைவு படுத்துவதோடு நின்றுவிடாமல் அந்த வலியையும் உணர்ந்து கொள்வதற்கும் உணவுப் பண்பாடு மூலம் இனவழிப்பின் குறியீடாகவும் இதனை செய்யவேண்டும்.

தாயக மண்ணில், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் செயற்படுகின்றது.

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றினையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டினை முன்னெடுப்பதே இதன் நோக்கமாக கருதப்படுகிறது.

போர்க்கால வாழ்வை மீள் நினைவுபடுத்தும் வகையில் எமது உறவுகளின் உயிர்காத்த அரிசியும், தண்ணீரும், உப்பும் கலந்தாக்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியை 18 மே அன்று வீடுகளில் காய்ச்சிப் பருகுவதன் மூலம் அந்த நாட்களின் நினைவுகளை அடுத்த சந்ததியும் இந்த அழியாத நினைவுகளை மறவாதிருக்க வேண்டும்.

ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுத்து இனப்படுகொலை செய்வது மாத்திரமின்றி – அந்த மக்களை பட்டினி போட்டு கொல்வதும் கொடுமையிலும் கொடுமையான இனப் படுகொலையகும்.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் சர்வதேச சட்டப்படி கருதப்படுகிறது.

இக்கோர இனப்படுகொலைகளை எதிர் கொண்ட மக்கள், எப்படி வாழ்வின் இறுதிக்கணங்களில் போராடியிருப்பார்கள் என்பதை எழுத்தில் வடிக்க முடியாது. கட்டாய பட்டினியால் மக்கள் எவ்வாறு போர்க்கால உணவை பெற்றார்கள் என்பதை அலசும் சிறிய ஆவணம் இது.

இருபதாம் நூற்றாண்டின் முதலாவது பெரும் இனப்படுகொலையாக துருக்கியில் ஒட்டோமான் ஆட்சியில் ஆர்மேனியர்கள் மீது படுகொலை செய்யப்பட்டமை தான் வரலாற்றில் பதியப்பட்ட கோர நிகழ்வாகும்.

இந்த கொடூர சம்பவத்தை உலகமே இனப்படுகொலை என்று கூறியபோது, துருக்கி அதனை கடுமையாக எதிர்த்து வருகிறது. ஆர்மேனிய இனப்படுகொலை இந்த நூற்றாண்டின் மிக கோரமான கொடூரங்களில் ஒன்றாகும். ஒரு நூற்றாண்டு கடந்தும் அட்டூழியங்களால் ஏற்பட்ட வடுக்கள் அழுத்தமாக பதியப்படுத்தப்பட்டுள்ளது.

20ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய படுகொலையாகக் கருதப்படும் ஆர்மேனிய படுகொலையில் மதாக் (Madagh)என்ற ஒருவகை உணவு தான் அவர்களை உயிரோட்டமாக வைத்திருந்தது.

ஆர்மேனிய இன அழிப்பைப் பின்னோக்கிப் பார்க்கின்றபோது, 1915 ஆம் ஆண்டில் மொத்தமாக 15 இலட்சம் ஆர்மேனிய மக்களைக் கொன்று குவித்த, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலையாக நடந்தேறிய ஓர் வரலாற்று கொடூரமாகும்.

தற்போது ஆர்மேனிய இனப்படுகொலையை ஏப்ரல் 24 அன்று உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான ஆர்மேனியர்கள் இறந்த தங்கள் மூதாதையர்களின் இழப்பை நினைவு கூர்ந்து மதிக்கிறார்கள்.

ஒட்டோமான் படைகளால், திட்டமிட்ட வகையில், 15 லட்சம் ஆர்மேனியர்கள் கொல்லப்பட்டதாக ஆர்மீனிய வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இரண்டாம் உலகப் போரில் 1941 இலிருந்து 1945 வரை, யூதர்கள் ஒரு இனப்படுகொலை மூலம் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டனர். நாஸி கட்சியின் உயர் தலைமையின் வழிகாட்டல்கள் உடன், ஜேர்மனி அரசின் அதிகார மையத்தின் ஒவ்வொரு பகுதியும் ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா முழுவதும் பெரும் படு





கொலைகளை நடத்துவதில் ஏற்பாடுகள் செய்வதில் ஈடுபட்டு வந்தது.

இப் பெரும் இன அழிப்பு இரண்டாம் உலகப் போரில், 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்கள் ஜெர்மனியில் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் ஹாலோ கோஸ்ட் (Holocaust) என்று குறிப்பிடுவர்.

ஜேர்மனியில் ஆட்சியில் இருந்த, அடொல்ஃப் ஹிட்லரின்நாஸி இன அழிப்புக் கொள்கையின் படி பல அறிஞர்கள் பெருமளவில் இந்த இன அழிப்பில் கொல்லப்பட்டனர்.

## யூதர்களின் பட்டினி தீர்த்த ‘மன்னா’:

வரலாற்று ரீதியாக இஸ்ரேலியர்களின் எகிப்திய அடக்குமுறையின் கசப்பைக் குறிக்கும் அடையாள உணவான மன்னா (Manna) எனும் உணவை நாஸி வதை முகாம்களில் உண்டதாகவும் சான்றுகள் உள்ளன.

மன்னா என்பது பைபிளின் படி, இஸ்ரேலிய யூதர்கள் நீண்ட இடப்பெயர்வில், பாலைவனத்தில் பயணம் செய்தபோது கடவுள் அவர்களுக்கு வழங்கிய ஒரு உண்ணைக் கூடிய பொருள் என்றும் பொருள்படும்.

யூதர்களின் நீண்ட இடப்பெயர்வு (எக்ஸோடஸ் ) வரலாற்று புத்தகத்தில், மனா தரையில் வீழ்ந்த உறைபனி போன்ற நல்ல, செதில் போன்ற பொருள் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இரவு நேரத்தில் பனியுடன் வந்து சேருவதாகவும், இது சூரியனின் வெப்பத்தால் உருகுவதற்கு முன் சேகரிக்கப்பட வேண்டும் என்றும்,ஒரு கொத்தமல்லி விதை போன்று, வெள்ளை நிறத்தில் இருந்தது என்றும் எக்ஸோடஸ் நூல் மேலும் கூறுகிறது.

## முள்ளிவாய்க்காலும் இனவழிப்பும்:

2009 மே இறுதிப் போரின், இறுதி நாட்களில் மக்களுக்கு உணவு, மருத்துவ தேவைகளை முற்றுமுதலாக தடுத்து நிறுத்தப்பட்டப் போது களமுனைப் போராளிகளுக்காக சேமித்து வைத்திருந்த அரிசிகளைக் கொண்டு பட்டினியால் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு தண்ணீரும் அரிசியும் கொண்ட கஞ்சி சமைத்துக் கொடுக்கப்பட்டது.

## அரசின் திட்டமிட்ட உணவுத்தடை:

இறுதிப் போரில் சிங்கள அரசின் திட்டமிட்ட உணவுத்தடையும், பல மாத காலத் தொடர் யுத்தத்தினாலும் மக்கள் உணவின்றித் தவித்தனர். பலருக்கு ஒரு நேர உணவு கூட கிடைக்காமல் பட்டினி கிடந்தார்கள். குழந்தைகளுக்கான உலர் உணவிற்கு அலைந்தார்கள்.

அக் காலகட்டத்தில் போராளிகளிற்காக ஒதுக்கப்பட்ட உணவுப் பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மக்களுக்கு வழங்கியது. அக்கால கட்டத்திலேயே கஞ்சி வழங்கும் பணியும் தொடங்கப் பட்டது. இறுதிக் காலகட்டத்தில் சிறிய தொகை அரிசியே இருந்தபடியால் அரிசியும் தவிடும் கலந்து உப்புமிட்டு முள்ளிவாய்க்கால்க் கஞ்சி யாகக் கொடுக்கப்பட்டது.

அக்கஞ்சியைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல இடங்களில் செய்து மக்களின் பசியை ஆற்றினார்கள். யுத்தம் முடிவுற்றுப் பல ஆண்டுகள் உருண்டோடிப் போனாலும் யுத்தம் தந்த வடுக்களை யாராலும் எளிதில் மறந்து விட முடியாது. இவ் யுத்தகால நினைவுகளில் மறக்க முடியா தவற்றுள் ஒன்றாக விளங்குவது தான் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி.

பல இலட்சம் மக்கள் கஞ்சிக்காகக் காத்திருந்து தமது பசிப்பிணி போக்கிய வரலாறுகளும் உண்டு. இக் கஞ்சி உணவு அன்றைய நாட்களில் எமது மக்களின் வாழ்வோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்ததாகவே காணப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் உணவுக்காகப் பட்ட அவலத்தையும், கஞ்சி உணவே எமது உறவுகளின் உயிரை தக்க வைத்தது என்பதையும் வெளிப்படுத்தும் முகமாகவும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் தெரியப்படுத்தும் முகமாகவும் நினைவேந்தல் நாட்களில் கஞ்சி உணவை வழங்குவது வழமையாகும். மே 18 இன அழிப்பு நாளை நினைவு கூரும் போது முள்ளிவாய்க்கால் நிலத்தில் விடுதலைக்குப் போராடிய ஈழத்தமிழினம் பட்ட துன்பத்தையும் உலகத்தமிழினம் நினைவு கூருவது சாலத் தகுந்தது.முள்ளிவாய்கால் கஞ்சியின் உணவு அடையாளம் என்பது, தாயக மண்ணின் வலிகளையும் வரலாறு சந்ததி மறவா சரித்திரமாக வேண்டும்.

இக்கஞ்சி உணவானது முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் போது எமது உறவுகள் உணவிற்காக பட்ட துன்பத்தை நாம் மட்டுமல்லாது எதிர்கால சந்ததியும், முழு உலகமும் அறிய வேண்டும்.





கிருஷ்ணமூர்த்தி டிலுக்ஷி

# அறியாமை அகதிகள்

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அகதிகள் உருவாகுவது உண்டு. ஆனால் இங்கே ஓர் கூட்டம் திட்டமிட்டு அகதிகளாக்கப்பட்டு இருக்கிறார்கள். இதில் வேதனை என்னவென்றால் தாங்களும் அகதிகள் தான் என்று அவர்களுக்கே தெரியாது. ஆதலால் தான் நான் என் சமூகத்தை பற்றி பேச போகும் இக்கட்டுரையில் எனது அடையாளத்தின் இருப்பை நானே அறியாமை அகதிகளாக அடையாளப்படுத்திக் கொள்கின்றேன்.

சுமார் 200 வருடங்களுக்கு முன்பு வெள்ளைக்கார வேட்டை நாய்களின் பெருந்தோட்ட வியாபார நலனுக்காகவும் தன் இன மக்களின் குருதியை குடித்து மகிழும் ஓநாய்களான பெரிய கங்காணிமார்களின் சுய இலாபத்திற்காகவும் வறுமையை காரணம் காட்டி ஓர் இனம் நாடு விட்டு நாடு அதாவது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தான் வாழ்ந்த மண்ணில் இருந்து வேரோடு அறுத்து எறியப்படுகிறார்கள் அவர்கள். உணர்வுகளை அந்த மண்ணிலேயே தொலைத்து விட்டு, வெறும் உயிர் தாங்கிய உடலாக இலங்கை மண்ணின் இறங்கும் துறையில் இறங்கி, நடையாக நடந்து நாட்டின் மத்திய பகுதியை அடைகிறார்கள். வறுமையின் பிடியால் சொந்த மண்ணைத் துறந்து வந்த மக்களுக்கு வந்த மண்ணிலும் துன்பத்திற்குப் பஞ்சமில்லை.

மலைகள் சூழ்ந்திருக்கும் காட்டை நாடாக மாற்றிய அந்த படைப்பாளிகள் மலிவான ஊதியத்திற்காக, சுய லாபத்திற்காகச் செயற்படும் அந்தக் கூட்டத்திற்காக, தமது உயர்வான உழைப்பை விற்றுக் கொண்டிருந்தார்கள். உடமை துறந்து, உழைப்பை வாரி வழங்கும் அக் கூட்டத்திற்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடையாது.

அயர்ந்து உறங்க ஒரு தகுதி வாய்ந்த உறையுள் கிடையாது, அறியாமை விலக்க கல்வி கிடையாது. சொந்தக் காணி மற்றும் நிலம் கிடையாது. தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள முகவரி கிடையாது. ஏன்? வாழ்ந்த வாழ்வை சொல்ல கல்லறைகூடக் கிடையாது. வழி காட்ட நல் ஆசான் கிடையாது,

வந்த சேர்ந்த மண்ணுக்காக மாண்டு மடியும் அந்த கூட்டத்திற்கு அரசியல் உரிமை கிடையாது. எதுவுமே கிடைக்காத இந்த மண்ணிலே அவர்களுக்கு கிடைத்ததெல்லாம் வறுமையும் அதன் வழி வந்த பசியும், பட்டினியும், பஞ்சமும் மட்டும் தான்.

தன் விதி இறைவன் செய்த சதி என்று நிதமும் உழைப்பை விற்று உரிமை அறியாது நிற்கும் அந்த இனத்தின் வலியை பொருட்படுத்த ஆளில்லை. ஆனால் அவர்களை நோக்கிய நையாண்டிக்கும், கேலிப் பேச்சுக்கும் ஒரு போதும்



பஞ்சமே இல்லை. உலகிற்கே நாகரிகம் கற்றுத் தந்த தமிழ்த்தாயின் பிள்ளைகள் இம் மண்ணிலே நாகரிகம் தெரியாதவர்கள் எனத் தூற்றப்படுகிறார் கள். கடல் கடந்து கடாரம் முதல் கோலோச்சிய வீரத் தமிழனின் வாரிசுகள் 'தேங்காய்க்காகவும் மாசிக்காகவும்' நாடு கடந்தார்கள் என நகைக்கப் படுகிறார்கள்.



**பல கண்ணீர் நிறைந்த போராட்டங்களுக்கு பிறகு கல்வி, மின்சாரம், போக்குவரத்து என்று ஒவ்வொன்றாக எங்களை நோக்கி வந்தது. ஆனால், இன்றுவரை என் சமூகத்திற்கு இச் சேவைகள் முழுமையாகக் கிடைத்திருக்கிறதா என்பது கேள்வி குறியே. அன்று வானொலி கேட்கக்கூடாது. வீட்டை முன் நகர்த்தி நிர்மாணிக்க கூடாது. மீறினால் தோட்ட நிர்வாகத்திற்குப் பதில் சொல்ல வேண்டும் அல்லது சம்மந்தப் பட்டவருக்கு வேலை நிறுத்தப்படும் என அர்த்தமற்ற ஆயிரம் கட்டுப்பாடுகள்.**

இத்தனை எள்ளி நகையாடுதல்களும் எங்களை நோக்கியது தான் என்று தெரியாமலே அறியாமையின் முழு உருவமாக இம் மண்ணிலே உழைத்து மடிகிறார்கள் இவர்கள். முதலாளிகளின் இலாபத்திற்காக மட்டுமே இம் மண்ணிலே இப்படி ஓர் இனம் உலாவ விடப்பட்டது. சபிக்கப்பட்ட இவ்வினத்திற்கு மீண்டும் ஒரு சாபக்கேடு 'பிரஜா உரிமை கோரல்' என்பதாகும்.

இம் மண்ணிலே வேர் விடத்தொடங்கிய அந்த இனத்தின் மற்றொரு பாகம் மீண்டும் இந்தியாவை நோக்கி பிடுங்கி எறியப்படுகிறது. பிரஜா உரிமை எங்களுக்கு கிடைக்கும் வரை யாரோ ஒருவரின் இலாபத்திற்காக நாம் அகதிகளாக்கப்பட்டு இருந்திருக்கிறோம். இதில் கொடுமை என்னவென்றால் நாங்கள் அகதிகள் என்று எங்களுக்கே தெரியாது.

இப்படி பல கண்ணீர் நிறைந்த போராட்டங்களுக்கு பிறகு கல்வி, மின்சாரம், போக்குவரத்து என்று ஒவ்வொன்றாக எங்களை நோக்கி வந்தது. ஆனால், இன்றுவரை என் சமூகத்திற்கு இச் சேவைகள் முழுமையாகக் கிடைத்திருக்கிறதா என்பது கேள்வி குறியே. அன்று வானொலி கேட்கக்கூடாது. வீட்டை முன் நகர்த்தி நிர்மாணிக்க கூடாது. மீறினால் தோட்ட நிர்வாகத்திற்குப் பதில் சொல்ல வேண்டும் அல்லது சம்மந்தப் பட்டவருக்கு வேலை நிறுத்தப்படும் என அர்த்தமற்ற ஆயிரம் கட்டுப்பாடுகள்.

இன்றும் கூட அந்த நிலை சற்று தளர்த்தப் பட்டிருக்கிறதே தவிர முழுமையாக நீக்கப்படவில்லை. ஏனென்றால் இன்றும் எங்களுக்கு முகவரி இல்லை. சொந்தமான காணி இல்லை. வாழும் வீட்டிற்கு உறுதிப் பத்திரம் இல்லை. கட்சிகளுக்கு துதி பாடிக் கொண்டிருக்கிறோமே தவிர ஆழ்ந்த அரசியல் அறிவு இல்லை. ஏன் இன்றும் கூட எங்களின் குடியிருப்பின் கோலமோ அல்லது தோட்ட நிர்வாகத்தினரை 'துரை' என்றழைக்கும் கலாச்சாரமோ முற்றிலுமாக மாறவே இல்லை.

முந்திய காலகட்டத்தில் உலக விடயங்களை அறிய எங்களுக்கு வாய்ப்பில்லை. ஆனால் இன்று கையடக்கத் தொலைபேசியில் தொடங்கி தொடர் நாடகங்கள் வரை சிக்கி நாங்களே எங்களின் வலி, வேதனை, வரலாறு என்பனவற்றை அறியாத அறியாமையின் அகதிகளாக புலம்பிக் கொண்டிருக்கின்றோம்.

இந்த சமூகத்தினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்ற போராட்ட களத்தில் நாம் தான் முதல் வரிசையில் நிற்கும் போராளிகள். 'அறியாமையின் அகதிகள்' என்ற முகமூடியை நம் தலைமுறை தகர்த்தெறியும் நாள் வெகு தொலைவில் இல்லை.



# இனப்படுகொலையும் சர்வதேச சட்டங்களும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா



## மானுட வரலாற்றின் துயரமான அத்தியாயங்கள்:

இனப்படுகொலை (Genocide) என்பது முறைப்படுத்தப் பட்ட மற்றும் விரிவான முறையில் இனவரையறை, நிற பேதமை, மதம் மற்றும் தேசியம் என்ற ஏதாவதொரு வகையில் ஒரு இனத்தை பாகுபடுத்தி, அந்த இனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பது ஆகும்.

இனப்படுகொலைக்கு எதிராக ஐக்கிய நாட்டு அமைப்பின் புதிய சட்டம் 1951 ஆம் ஆண்டு அமலுக்கு வந்தபின், அதன் அப்போதைய 80 உறுப்பு நாடுகளும் அந்த சட்டத்தின் சரத்துக்களை தங்கள் நாட்டு சொந்த சட்டத்தில் இணைத்தன. இந்த செயலானது, குற்றவாளிகளை பரந்த அளவில் அடையாளம் காண்பதற்கு உதவி புரிந்தது எனலாம்.

உலகம் முழுவதும் பல நாடுகளிலும் கடந்த 250 ஆண்டுகளில் இனப்படுகொலைகள் என்ற பெயரில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை லட்சமோ, கோடியோ அல்ல பல மில்லியன்களைத் தாண்டுகிறது என்பதுதான் உண்மை.



ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் கருதப்படுகிறது. ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுப்பதும் இனப்படுகொலையாகப் பார்க்கப்படுகிறது.

இனப்படுகொலையானது ஆங்கிலத்தில் (Genocide) ஜெனோசைட் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஜெனோசைட் என்ற வார்த்தையை ரஃபேல் லெம்கின் என்ற போலந்து நாட்டைச் சேர்ந்த யூத வழக்கறிஞர், நாஸி தாக்குதலிலிருந்து தப்பி, அமெரிக்காவில் தஞ்சமடைந்தபோது லத்தீன் – கிரேக்க – பிரெஞ்ச் மூலங்களிலிருந்து உருவாக்கினார் என அறியப்படுகிறது.

1933 ஆம் ஆண்டு ஈராக்கில் நடந்த அசீரிய(Assyrian) இனப் படுகொலையானது, ரஃபேல் லெம்கின் நினைவை முதலாம் உலகப் போரின்போது நடந்த ஆர்மீனியப் படுகொலையை நோக்கி நினைவு படுத்துச் சென்றது. எனவே இனப்படுகொலை என்ற காட்டுமிராண்டி செயலுக்கெதிரான சர்வதேச சட்ட வடிவுக்கான ஒரு முன்வரவை அவர் ஸ்பெய்ன் தலைநகர் மாட்ரிட்டில் இருந்த சர்வதேச நாடுகள் கூட்டமைப்பின் (லீன் ஆஃப் நேஷன்ஸ்) சட்ட கவுன்சிலுக்கு அப்போது வழங்கினார்.

உலகில் இனப்படுகொலை என்பதற்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படியான ஒரு விளக்கத்தை இன்று வரை பெறமுடியாததற்கு இந்த அரசியல் பிரச்சனைகளே காரணம் என்றும், விமர்சிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு நாடும் தனது அரசியல் நலனுக்கேற்ப இந்த விஷயத்தில் நடந்து கொள்கின்றன.



ஒரு இனப்படுகொலை நடந்த முடிந்தபிறகு குற்றவாளிகளை தண்டிப்பதற்கு சர்வதேச அளவில் சில நாடுகள் நடவடிக்கை எடுக்கின்றன. ஆனால் அந்தப் படுகொலை நடவடிக்கையில் அந்த நாடுகள் ஏன் எதுவுமே செய்வதில்லை என்ற பாரதூரமான விமர்சனம் எப்போதும் உண்டு.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள்:

இனப்படுகொலை ஒரு சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் ஒரு குற்றமாகும். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு, இனப்படுகொலை என்பது கட்டாயத் தேவையின்படி, ஒரு மாபெரும் சர்வதேச குற்றமாக கருதப்பட்டாலும், அதை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாடுகளோ அல்லது வலிமை வாய்ந்த நாடுகளோ ஒத்துழைக்காமல் சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

ஈரானில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பஹாய் (Bahai) என்ற சமயத்தின் நம்பிக்கையாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேரை அந்நாட்டு ஷியா இஸ்லாமிய அரசாங்கம் கொன்று குவித்தது. அவர்களின் சொத்துக்களையும், உரிமைகளையும் பறித்தது. பலரை நாட்டைவிட்டு விரட்டியது. இன்று வரை அந்நாட்டில் பஹாய்களுக்கு கொடுமைகள் நடந்தவண்ணம் உள்ளன.

தொடரும் துயரமாக முதலாம் உலகப்போர் சமயத்தில் ஆர்மீனியா நிலத்தில் துருக்கியர்களால் லட்சக்கணக்கில் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். ஈராக் மற்றும் துருக்கி பிராந்தியத்தின் ஆயிரக்கணக்கான குர்துக்கள் கொல்லப்பட்டனர்.

பின்னர் இரண்டாம் உலகப் போரின் போது, பல லட்சம் யூதர்களை ஹிட்லரின் நாஸிச அரசு படுகொலை செய்தது.

## உலகப் போர்களில் இனப்படு கொலை:

முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு சேர்ந்த துருக்கி தோல்வியடைந்தது. தோல்விக்கு பழிவாங்கும் முகமாக ஆர்மீனியர்கள் மீது மிகவும் கோபமடைந்தது ஓட்டோமன் அரசு.

துருக்கி பேரரசைச் சேர்ந்த ராணுவத்தின் மூலம் ஆர்மேனியர்கள் துரோகிகள் என அவர்கள் குற்றம்சாட்டப்பட்டு, கைது செய்து பலர் கொல்லப்பட்டனர். 1915இல் துருக்கி ஓட்டோமன் பேரரசு, முதல் உலகப்போர் தொடங்கும் சமயத்தில் தங்களது இருப்பினைத் தக்க வைத்துக்கொள்ள அந்தப் போரில் ஈடுபட முடிவு செய்தது.

ஏற்கெனவே இழந்த செல்வாக்கினை மீட்க இது உதவும் என்று நம்பி அவர்கள் அதில் இறங்கினர். முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு இணைந்து களம் கண்டது ஓட்டோமன் அரசு.

துருக்கியின் உள்நாட்டில் அதிகாரச்சண்டை அந்நாட்டிற்கு மற்றொரு தலைவலியாக அமைந்தது. இந்த நிலையில் நிறைய புரட்சி இயக்கங்கள், நாடு முழுவதும் பலவாறாகத் தோன்றின. இதற்கெல்லாம் காரணம் யார் என்று ஆராய்ந்தபோது, ஆர்மீனியர்கள்தான் என்று குற்றஞ்சாட்டி அவர்களை படுகொலை செய்தது.

இவ்வாறாக 1915 முதல் 1918-ம் ஆண்டுவரை ஓட்டோமன் அரசால் 5 முதல் 12 லட்சம் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர்.

## ஹிட்லரின் யூத படுகொலை:

யூதர்களை கொடுமைப்படுத்துவது, துன்புறுத்துவது, கொலைசெய்வது என இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த சூழலில், தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. உண்மையில் ஹிட்லரால் ஜெர்மனியில் யூதர்கள் கொடூரமாக திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

யூதர்கள் நெருக்கடியான பகுதிகளில் அடைத்துவைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து சரக்குத் தொடர் வண்டிகள் மூலம் நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த வதை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத்துக் கொல்லப்பட்டனர்.

> **“வரலாற்றில் மனித இனம் தோன்றியதிலிருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது. மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வரலாற்றின் துயரமாக பார்க்கலாம்.”**

இரண்டு வகையான முகாம்களை நாஜிக்கள் அமைத்தனர். ஒன்று, சாதாரண கைதி முகாம். இதில் கைதிகளை அடிமைபோல் நடத்தி, அவர்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவார்கள். தேவையில்லாமல் கொல்லமாட்டார்கள். இன்னொன்று வதை முகாம்கள், இவை





யூதர்களை கொல்வதற்காகவே உருவாக்கப்பட்டதாகும்.

## கம்போடியாவில் பொல்பொட் அரசின் கோரம்:

கம்போடியாவில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டும் என்று எண்ணினார் ஆட்சியேறிய பொல் பொட் (Pol Pot ) அரசு. அனைவரும் விவசாயம் செய்ய வேண்டும் எனக் கட்டாயப் படுத்தப்பட்டனர். குறிப்பாக 1975-1979 காலகட்டத்தில், பொது மக்களின் சொத்துக்கள் அனைத்தும் பொதுவுடைமை ஆக்கப்பட்டு, பொல் பொட் அரசால் கைப் பற்றப்பட்டது.

1953-ம் ஆண்டு கம்போடியா பிரான்ஸிடமிருந்து விடுதலை அடைந்த பின், சிஹானக் கம்போடியா அரசனாகப் பொறுப்பேற்றார். கம்போடியன் கம்யூனிஸ்ட் கட்சியின் [கிமேர் ரூஜ்] தலைவர் ஆன பொல் பொட் சிஹானக்கை பதவியிறக்கி, பின்னர் 1976-ல் பொல் பொட் பிரதமராகப் பதவியேற்றார். வணிகம், மருத்துவம், தொழில்துறை எனப் பல துறைகள் எல்லாம் நிறுத்தப்பட்டன.




ஆட்சியாளர்களை எதிர்த்து போராடிய மக்களைச் சிறையிலடைத்து சித்திரவதை செய்தும் பசி, பட்டினி மற்றும் சட்ட விரோதமான முறையிலும் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன. குருட்டுத்தனமான கொள்கையும், செயல்முறைப்படுத்தாத திறனும் மக்களை வாட்டின. சுமார் 20 லட்சம் மக்கள் இம்முறையில் கொல்லப்பட்டனர்.

## தொடரும் படுகொலைகள்:

1975-ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு இனப் படுகொலைகளாக முன்வைக்கின்றனர். அமெரிக்க செவ்விந்தியர்கள், பாலஸ்தீனியர்கள், காங்கோ, சோமாலியா, கொசாவா என உலக நாடுகளின் வரலாற்றில் ‘இனப்படுகொலைகள்’ தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன என்பது நிதர்சனம். பரவலாக பல நூற்றாண்டுகளில் நடந்த மத மோதல்கள் ஏராளமான மக்கள் தேவையின்றி அழிவதற்கு காரணமாயின. ஒரு மதம், தான் பரவ வேண்டும் என்பதற்காக இன்னொரு மதத்தை அழித்தது.

ஆயினும் உலகில் தோன்றிய எத்தனையோ மறைநெறிகள் இந்தக் கொடுமையை தடுப்பதற்கான போதனைகளை கூறியபோதிலும், மனிதர்கள் தொடர்ந்து அதை மறந்துவிடுகிறார்கள் என்பதே நிஜமாகும்.

## ருவாண்டா இனப்படுகொலை (1994)

ஜெர்மனியின் காலனியாதிக்கத்தின்கீழ் இருந்த நாடு ருவாண்டா, புருண்டி. இங்கு டூட்சி, ஹூட்டு என்ற இரண்டு இன குழுக்கள் வாழ்ந்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக டூட்சி இன மக்கள் ஆண்டுவர, பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பிறகு,1972-ல் புருண்டியில் ஹூட்டுகளின் புரட்சி தொடங்கியது.

1994 ஏப்ரல் 7 அன்று ஹூட்டு இன மக்கள், டூட்சி இனத்தவரை கொல்லத் திட்டமிட்டனர். பெரியவர், சிறியவர் எனப் பாரபட்சம் இல்லாமல் அனைவரையும் கொன்று குவித்தனர் ஹூட்டு இனத்தினர். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்தனர். அத்துடன் ஆயிரக்கணக்கானோர் முடமாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போஸ்னியா இனப்படுகொலை


பால்க்கன் பிராந்தியத்தில் யூகோஸ்லாவியாவிடமிருந்து பிரிந்த நாடு போஸ்னியா ஆகும். 1990களில் புதிதாக உருவாக்கப்பட்ட தேசம் என்பதால் நாடு முழுவதும் குழப்பம் ஏற்பட்டது. அங்கே போஸ்னியர்கள், செர்பியர்கள், குரேஷியர்கள் என மூன்று வகையான இன மக்கள் வாழ்ந்து வந்தனர். குரேஷிய அதிபருக்கும், போஸ்னிய அதிபருக்கும் ஓர் ஒப்பந்தத்தில் முரண்பாடு ஏற்பட, அங்கிருந்து தொடங்கியது இப்பிரச்னை. போஸ்னியாவில் 1993-ம் ஆண்டில் 2000 பேர் கொலை செய்யபட்டனர். 64 இஸ்லாமியர்களைக் கைது செய்து பேருந்தில் அடைத்து, தீவைத்துக் கொளுத்தினர். இதில் 56 பேர் இறந்தனர். செர்பிய ராணுவ ஆட்சியில் 1992-1995 காலகட்டத்தில் இரண்டு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சம் பேர் காணாமல் போனார்கள்.




## டார்ஃபுர்-சூடான் இனப்படுகொலை

ஆப்பிரிக்காவின் சூடானில் உள்ள டார்ஃபுர் மாநிலத்தில் நடைபெற்ற இப்படுகொலை பொருளாதார ரீதியாக முக்கியமானதாகும்.





சூடானின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் சண்டையிட்டுக் கொள்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தன. இந்நிலையில் மேற்கு சூடானில் உள்ள டார்ஃபுரில் எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வடக்கு மற்றும் தெற்கு பிரச்னை மேலும் கொளுந்துவிட்டு எரிந்தது. இவ்வாறாக 1972-ல் உள்நாட்டு யுத்தம் முடிந்து, 1983-ல் மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது.

கிட்டத்தட்ட 20 வருடங்களில் 20 லட்சம் பேர் உயிரிழந்தனர். 40 லட்சம் பேர் வீடுகளை இழந்து அகதிகளாகினர். தென் சூடான் தனி நாடாக ஜூலை 2011-ல் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது சூடான் அரசு.

### ஈழத்தில் தமிழர் படுகொலை:

ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலை பெரும் வலியையும், ஆற்றாமையையும் இப்போதும் எங்கள் ஈழமண் துயரங்களுடன் தேக்கி வைத்திருக்கிறது. விடியலுக்கான நீண்ட பயணம் தொடர்கிறது.

1983-ம் ஆண்டு 'கறுப்பு ஜூலை' சம்பவம் இன்றளவும் நீங்காவடுவாக தமிழர்கள் மத்தியில் நிலவுகிறது. கண்ணில்பட்ட எல்லாரையும் கொன்று, பெண்கள் பலரும் பாலியல் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், படுகொலையும் செய்யப்பட்டனர்.

1958, 1977, 1983-ம் ஆண்டுகளில் நடந்த இனக்கலவரங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. ஈழப் போராட்டம் ஆரம்பித்த பின்பு வானூர்திகளிலிருந்து கண்மூடித்தனமாக குண்டுவீசுதல், ஏவுகணை வீச்சு, நேரடித் தாக்குதல் போன்றவற்றின் மூலம் இதுவரை சுமார் லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர் அகதிகளாயினர்.

இன்னமும் தொடரும் துயரமாக, அரசியல் மற்றும் பொருளாதார தேவைகள் மட்டுமே மனிதர்கள் அழிய காரணமாவதில்லை. பல சமயங்களில் அதைவிட சித்தாந்தம், கொள்கை, இனப்பெருமை போன்ற விஷயங்கள் பெரும்பாலான மனித அழிவிற்கு காரணமாகின்றன.

வரலாற்றில் மனித இனம் தோன்றியதிலிருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது. மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வரலாற்றின் துயரமாக பார்க்கலாம்.

# பழகிக் கொள்வோம்!

முல்லை பாஸ்கர்

துளித் துளியாய்
விழுகின்ற
மழை நீரை
சேமிக்கும் சமுத்திரம் போல்

கார்காலம்
வரும் என்று
முன்னமே கணித்து..
களைப்பில்லாமல்
சேமிக்கும் எறும்புகளை போல

பூஞ்சோலைக்குள்
இசைத்துக் கொண்டு
தேனை சேகரிக்கும்
தேனீக்களைப் போல
நாமும் சேமிப்போம்!!

தலையெல்லாம்
நரை விழுந்து
மேனியல்லாம் தளர்ந்து
தள்ளாடி விழும் பொழுது,
தாங்கிப் பிடிக்கும் ஊன்றுகோலாய்..!

காற்றில் ஆடும்
கொடியை
கரம் பிடிக்கும் கிளையாய்.!
சாய்ந்து கொள்ள
ஒரு தோளாய்
இளைப்பாற ஒரு நிழலாய்!

வரும் வழி
பெரியதாக இருக்கத்
தேவையே இல்லை!!
செலவுப் பாதையை
சிறிதாக்குவோம்!

சிறுவாட்டுக் காசிருந்தால்
முதுமை
ஒன்றும் பயமில்லை.



திசராணி

# இனவாதமும் போதை அரசியலும்

நீண்ட ஈழப்போர் முடிவுக்கு வந்து இந்த மாதத்துடன் 14ஆண்டுகள் நிறைவடைகின்றன.

தொழில் முனைவோரான போதகர் ஜெரோம் பெர்னாண்டோவிடம் இருந்து தேசத்தைக் காப்பாற்ற பொதுபல சேனாவின் தலைவர் கல்கொட–அத்தே ஞானசார மீண்டும் தலைதூக்கியதையும் இந்த வாரம் பார்த்தது. புதிதாக ஒரு மதப் போரைப் பற்றி எச்சரிக்கும் வாய்மொழி மூல முழக்கமும் கேட்டது.

வாரத்தின் பிற்பகுதியில், போரினால் இறந்த அனைவரினதும் நினைவாக பொரளை மயானத்தில் நடைபெற்ற நிகழ்வை சிங்கள–பௌத்த தீவிரவாதிகளின் கூட்டமொன்று புலிகளின் நினைவேந்தல் என்று கண்டித்தனர். அநேகமாக போரில் இறந்த சிறுவர்கள் மற்றும் சின்னஞ்சிறு குழந்தைகள் வரையிலான தமிழர்களை [குறிப்பாக ராஜபக்சக்களின் மனிதாபிமான நடவடிக்கையில் சிவிலியன் உயிரிழப்புகளுடன்] புலிகளென கண்டித்தனர்.



கோட்டை புகையிரத நிலையத்திற்கு வெளியே உள்ள புத்தர் சிலைக்கு அருகில் உள்ள சாமானியர் மற்றும் துறவி வீரர்களின் மற்றொரு குழுவொன்று கூடி, நாடு,இனம் மற்றும் மதத்தைப் பாதுகாப்பதாக உறுதியளித்ததோடு வாரம் முடிவடைந்தது .

அதிர்ஷ்டவசமாக, பொருளாதார பிழைப்புக்கான உண்மையான போராட்டத்தில் மூழ்கியிருந்த சாதாரண இலங்கையர்கள், இந்த அரங்குகளை புறக்கணித்ததால் ஆரவாரம் பிசுபிசுப்பாகியது.

நீண்ட ஈழப்போரின் முடிவு, வெற்றி பெற்ற சிங்கள மக்களுக்கு கூட அமைதியையோ சுபிட்ஷத்தையோ தரவில்லை. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சமாதான அனுகூலம் ஒரு பாதுகாப்பு ஸ்தாபனத்தால் விழுங்கப்பட்டது. அது தொடர்ந்து விரிவடைந்தது.

ராஜபக்சக்கள் வடக்கு மற்றும் கிழக்கின் அனைத்து தமிழ் மக்களையும் அந்நிய எதிரிகள் போல் நடத்தினார்கள். ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் பிள்ளைகளையும் நலன்புரி கிராமங்கள் என்று அழைக்கப்படும் திறந்தவெளி சிறை முகாம்களில் அடைத்தனர். [இந்திய மற்றும் சர்வதேச அழுத்தம் இறுதியில் இந்த வெகுஜனக் கொள்கையை கைவிட அவர்களைக் கட்டாயப்படுத்தியது.]

மரணிக்காத புலியின் அழுகை தென்பகுதியைக் கவரத் தவறிய போது, ஆட்சியானது ஏனைய எதிரிகளைத் தேடியதுடன், 'அத்துமீறும் முஸ்லிம்களை' தீர்ப்பதற்கு முன், 'அன்னிய கிறிஸ்தவர்களுடன்' சரசமாடியது. ஈழப்போர் முடிந்து 10 ஆவது ஆண்டு நிறைவடைவதற்கு மூன்று வாரங்கள் உள்ள நிலையில், அந்த நச்சு விதையின் அறுவடை 2019 ஏப்ரலில் அறுவடை செய்யப்பட்டது.

போர் தேவையற்றது, தடுக்கக்கூடியது. அதை நோக்கி வைத்த ஒவ்வொரு அடியும் தேசிய தேவை அல்லது மக்கள் கோரிக்கையால்



எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, வர்க்க அடிப்படையில் பிளவுபட்ட அரசியல் போர்க்களத்தில் வெற்றிபெற முடியாது என்பதையும், இனம்+மதம்=தேசம் சமன்பாட்டை தனது கொள்கையாக ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு நேர்மையற்றவர் என்பதையும் அறிந்துகொள்ளும் அளவுக்கு புத்திசாலியாக இருந்தார். பௌத்த ஆணைக்குழுவின் அறிக்கையை அவர் முழுமையாக ஏற்றுக்கொண்டார். பிக்குகள் ஐக்கிய பிக்குகள் முன்னணியை உருவாக்கி, அவரது வெற்றியை உறுதி செய்வதற்காக வீடு வீடாக பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

எங்களின் சோகம் செல்லாத பாதைகளால் சிதறடிக்கப்பட்டுள்ளது. 1956 ஆம் ஆண்டு



புத்தர் ஜெயந்தியை புத்தர் போதித்ததை மையப்படுத்தியும், ஆன்மிக மறுமலர்ச்சிக்கான செயல்முறையைத் தொடங்குவதன் மூலமும் கொண்டாடப்பட்டிருக்கலாம். மாறாக, பௌத்தத்தை அதன் காலனித்துவத்திற்கு முந்தைய மகிமைக்கு மீட்டெடுக்கும் போர்வையில், மகாவம்சத்திற்காக திரிபிடகம் கைவிடப்பட்டது பௌத்தத்தின் அடிப்படை அம்சமான கருணை, அகிம்சை மற்றும் மிதமான மதிப்புகள் வெறுப்பு, வன்முறை மற்றும் தீவிரவாதத்தால் மாற்றப்பட்டன.

பௌத்த ஆணைக்குழுவின் அறிக்கையின் தலைப்பானது பௌத்தத்திற்கு துரோகம் என்பதாகும். உண்மையான துரோகம் உள்ளே இருந்து வந்தது, துறவிகள் மற்றும் மன்னர்களின் வேலை. ஒரு உலகளாவிய போதனையானது ஒரு இனத்தின் பிரத்தியேகமான பாதுகாப்பிற்குள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டது. சாதியை வெளிப்படையாக நிராகரித்த ஒரு போதனையானது அதன் இதயத்தில் சாதிப் பாகுபாட்டைப் புகுத்துவதன் மூலம் சிதைக்கப்பட்டுள்ளது.

பௌத்த ஆணைக்குழுவின் அறிக்கையானது, இனம் மற்றும் சாதி என்ற இரட்டை வக்கிரங்களை அகற்றுவதன் மூலம் புத்தர் கற்பித்ததன் மூலம் இழிவுபடுத்தப்பட்ட இலங்கை பௌத்தத்தை மீளப் பெறுவதற்கான ஒரு போக்கை வகுத்திருக்கலாம். மாறாக அது ஒரு ஒற்றைத் துறவியை சாதி அடிப்படையிலான நிகாயாக்களாகப் பிரிப்பதைப் புறக்கணித்தது (ஒரு கண்டிய மன்னரால் உருவாக்கப்பட்ட

தூண்டப்படவில்லை. அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கும் மத-இன தீவிரவாதத்திற்கும் இடையிலானஅசாதாரணமான ஐக்கியமே உந்து சக்தியாக இருந்தது. கடந்த வார நிகழ்வுகள் குறிப்பிடுவது போல், அந்த ஐக்கியம் மரணத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளது. மற்றும் அதன் தற்போதைய பங்காளிகள் அரசியல் பொதுவோட்டத்திற்கு திரும்புவதற்கு பொறுமையின்றி காத்திருக்கின்றனர். இரத்தத்தில் தோய்ந்த எமது வரலாற்றைக் கண்டு அறியாமல், அவர்கள் அதை மீண்டும் செய்ய விரும்புகிறார்கள்.

1955-56 வரை இலங்கை அரசியல் வர்க்கரீதியாகப் பிளவுபட்டிருந்தது. அந்த பிளவு எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் தேர்தல் அபிலாஷைகளுக்கு சிறிய இடத்தை விட்டுச்சென்றது. அவரால் புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீ.ல.சு.க, 1952 இல் ஐ.தே.க வுக்கு சவால் விடுத்து தோல்வியடைந்தது. 1953 ஹர்த்தாலில் நாட்டையே உலுக்கி ஒரு அரசாங்கத்தை தப்பி ஓட வைத்தபோது அவர் ஒரு பார்வையாளனாக இருந்தார். இடதுசாரிகள் அடுத்த தேர்தலில் அரசாங்கத்தை அமைப்பதற்கான உண்மையான வாய்ப்பைப் பெற்றனர்.

குறிப்பாக அதன் உடைந்த கூறுகள் தங்களை ஒன்றிணைந்து செயற்பட வைக்கும். அந்த வழியை இலங்கை எடுத்திருந்தால் சிங்களம் மட்டும் இருந்திருக்காது. 1958 ஸ்ரீ கலவரம், கறுப்பு ஜூலை, 25 ஆண்டு கால யுத்தம் இருந்திருக்காது.



> **போதகர் ஜெரோம் புத்தரை அவமதிக்க முயன்றாலும் முடியாது. புத்தர் மோசமானவரென்று அவரது முகத்திற்கு நேராக குற்றம் சாட்டப்பட்டார். மேலும் அவரது பதில் என்னவென்றால், அவர் அவமானங்களை ஏற்க மறுத்ததால், அவர்கள் அவற்றைச் செய்தவர்களிடம் திரும்புவார்கள். பாதிரியார் ஜெரோம் பிரதிநித்துவப்படுத்தும் ஆபத்து அரசியல் பிக்குகள் மற்றும் ஏனைய அரசியல் செயலில் உள்ள மதப் பிரமுகர்கள் (கத்தோலிக்க கர்தினால் உட்பட) பிரதிநித்துவப்படுத்தும் அதே ஆபத்து.**



**போரினால் இறந்த அனைவரினதும் நினைவாக பொரளை மயானத்தில் நடைபெற்ற நிகழ்வை சிங்கள–பௌத்த தீவிரவாதிகளின் கூட்டமொன்று புலிகளின் நினைவேந்தல் என்று கண்டித்தனர். அநேகமாக போரில் இறந்த சிறுவர்கள் மற்றும் சின்னஞ்சிறு குழந்தைகள் வரையிலான தமிழர்களை (குறிப்பாக ராஜபக்சக்களின் மனிதாபிமான நடவடிக்கையில் சிவிலியன் உயிரிழப்புகளுடன்) புலிகளென கண்டித்தனர்.**

ஒரு சிதைவு] மற்றும் பௌத்தத்தின் இனவாத தனித்துவத்தின் மீது கவனம் செலுத்தியது.

1956ஐ உண்மையான தேசத்தைக் கட்டியெழுப்பும் ஆண்டாக மாற்றியிருக்கலாம். சிதைவுகளிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்ட பௌத்தம், ஒரு புதிய இலங்கை தேசத்திற்கு ஒரு பிணைப்பு முகவராக மாற்றியிருக்கலாம். மாறாக, பிக்குகள் மற்றும் அரசியல்வாதிகளின் புனிதமற்ற கூட்டணி பௌத்தத்தை பிளவுபடுத்தும் முகவராக மாற்றியது. 67 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தப் பிசாசு எம்மைத் தொடர்ந்து வேட்டையாடுகிறது.

இந்த ஆண்டு ஜனவரியில், குருநாகலிலுள்ள பொத்துஹெராவில் தன்னை போதிசத்வா [எதிர்கால புத்தர் – ஜெரோம் போன்ற ஒருவர் ] என்று அழைத்துக் கொண்ட ஒருவரால் கட்டப்பட்ட ஒரு போலி தலதா மாளிகை பற்றி ஒரு கூச்சல் கேட்டது. இந்த கட்டிடத்திற்கு



நிதியளிக்க மக்கள் பணம் மற்றும் நகைகளை நன்கொடையாக வழங்குவதாக ஊடகங்கள் கூறின. இங்கிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் நன்கொடைகள் குவிந்தன.

இந்த போலிக்கு எதிராக அரசியல் தலையீடு கோரி மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் ,தலதாமாளிகையின் தியவதன நிலமே ஆகியோர் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர். [தற்செயலாக, மற்ற இரண்டு நிகாயாக்களின் தலைமை பீடாதிபதிகள், ஜாதி தடையாக புனித தந்தத்தை சுற்றியுள்ள சடங்குகளில் எந்தப் பங்கும் வகிக்கக் கூடாது என்பதற்காக கடிதத்தில் கையெழுத்திடவில்லை].

உண்மைகள் வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. ஒரு ஆர்வமுள்ள தனிநபர் மற்றொரு தலதா மாளிகையை கட்ட நினைத்தார். கட்டிடம் முழுமையடைந்தவுடன், புனித தந்தப் பல் அவருக்கு வந்து சேரும் என்ற அவரது கூற்றை நம்புவதற்கு போதுமான பௌத்தர்கள் தயாராக இருந்தனர். காரணம் மற்றும் விளைவு [ஹேது–பால–வாதயா] சட்டத்தை ஏற்றுக்கொள்ளும் ஒரு பகுத்தறிவு போதனை, நினைவுச்சின்னங்கள் அற்புதங்களைச் செய்யக்கூடிய மற்றும் மரங்களின் விருப்பங்களை வழங்கும் ஒரு கட்டுக்கதை நிறைந்த மூடநம்பிக்கையாக எவ்வளவு தூரம் சிதைந்தது என்பதை முழு கதையும் நிரூபிக்கிறது.

புத்த மதத்தின் இந்த பதிப்பில், புத்தரை அவமதித்ததற்காக [அல்லது அவரது நினைவுச்சின்னங்கள்] ஆண்கள் கைது செய்யப்படுகிறார்கள், அதே நேரத்தில் அவருடைய சீடர்கள் என்று கூறுபவர்கள் அடிப்படையில் தினசரி அவரது போதனைகளை மீறுகிறார்கள்.

புத்தர், தனது இறுதிப் பிரசங்கத்தில், சாசனத்தின் ஜீவிதம் மற்றும் விரிவாக்கத்திற்கான பாதையை அமைத்தார். அவர் ஏழு நிபந்தனைகள், மேலும் ஏழு நிபந்தனைகள், ஏழு நல்ல குணங்கள், ஏழு அறிவொளி காரணிகள், ஏழு உணர்வுகள் மற்றும் மேலும் ஆறு நிலைமைகளைக் குறிப்பிட்டார். துறவிகள் இந்த 41 விதிகளைக் கடைப்



பிடித்தால், சாசனம் செழிக்கும். அவர் அரச ஆதரவைப் பற்றியோ, இலங்கை என்ற தீவில் மட்டுமே எஞ்சியிருக்கும் அவரது பழமையான போதனைகளைப் பற்றியோ, சடங்குகள் அல்லது நினைவுச் சின்னங்கள் பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை. துறவிகளின் நடத்தையில் மட்டுமே அவரது கவனம் இருந்தது. மேலும் இன்று இலங்கையில் பௌத்தம் கடந்து செல்வதில், ஏறக்குறைய ஒவ்வொரு நிபந்தனைகளும் அன்றாடம் மற்றும் கண்கூடாக மீறப்படுகின்றன. அந்த விதிமீறல்கள் புறக்கணிக்கப்பட்டு, பிணையில் வெளிவர முடியாத குற்றமாக மாற்றப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில், எழுத்தாளர் சக்திக சத்குமார ஐசிசிபிஆரின் கீழ் கைது செய்யப்பட்டு பிணை இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டார். அவர் எழுதிய சிறுகதை [அர்த்த - பாதி] பற்றி துறவிகள் குழு செய்த புகாரின் விளைவே இந்த கைதாகும்.. கதை ஒரு கற்பனையான மடாலய வாழ்க்கையைப் பற்றியது மூத்த துறவிகளால் இளம் துறவிகளை துஷ்பிரயோகம் செய்வது பற்றிய குறிப்பைக் கொண்டுள்ளது. பொலிஸ் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ‘மதகுருமார்கள் மத்தியில் ஓரினச்சேர்க்கை நடவடிக்கைகள் குறித்த குறிப்பு பௌத்தத்தை அவமதிப்பதாக துறவிகள் குழு புகார் அளித்துள்ளது.’

வினய பிடக என்பது துறவிகளின் பாலியல் தவறான நடத்தையைக் குறிப்பிடுகிறது. துறவியாவது மனித ஆசைகளிலிருந்து ஒருவரை விடுவிக்காது என்பதை புத்தர் தெளிவாக புரிந்து கொண்டார். பொதுவோட்டத்தில் நுழைபவர்கள் மட்டுமே இத்தகைய ஏக்கங்களிலிருந்து விடுபடுவார்கள். இலங்கையில் அறியப்பட்ட பொதுவோட்டத்திற்குள் பிரவேசிப்பவர்கள் யாரும் இல்லாததால், புத்தர் விதித்த முறைகேடுகள் இங்கும் இருக்க வாய்ப்புள்ளது.

இந்த ஆண்டு மட்டும் சிறுவர் துஷ்பிரயோகம் [பாலியல் துஷ்பிரயோகம் உட்பட] சந்தேகத்தின் பேரில் பல பிக்குகள் கைது செய்யப்பட்டிருப்பது, சக்திக சத்குமாரவின் புனைகதைகள் கூறுவது நிஜ வாழ்க்கையில் இருப்பதைக் குறிக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, இன்றைய மதப் பிரபஞ்சத்தில், குற்றம் பற்றி பேசுவதை விட அது குறை

**போதகர் ஜெரோம் புத்தரை அவமதிக்க முயன்றாலும் முடியாது. புத்தர் மோசமானவரென்று அவரது முகத்திற்கு நேராக குற்றம் சாட்டப்பட்டார். மேலும் அவரது பதில் என்னவென்றால், அவர் அவமானங்களை ஏற்க மறுத்ததால், அவர்கள் அவற்றைச் செய்தவர்களிடம் திரும்புவார்கள். பாதிரியார் ஜெரோம் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆபத்து அரசியல் பிக்குகள் மற்றும் ஏனைய அரசியல் செயலில் உள்ள மதப் பிரமுகர்கள் (கத்தோலிக்கர்தினால் உட்பட) பிரதிநிதித்துவப்படுத்தும் அதே ஆபத்து.**

வானதாக இருக்கும் . அரசியல் துறவிகள் மத்தியில் ஒரு புதிய போக்கு, காவி அங்கியை ‘அரஹத் தஜாயா’ [அறிவொளி பெற்ற துறவிகளின் தரநிலை] என்று குறிப்பிடுவது. இந்த புதிய புனைவு , துறவிகளை ஆய்வு மற்றும் விமர்சனத்திற்கு மேலாக வைக்கும் முயற்சியில் ஒரு அடையாளமாக உள்ளது. இது சில தசாப்தங்களுக்கு முன்பு வரை கத்தோலிக்க ஐரோப்பாவின் பல பகுதிகளில் பரவியிருந்த குருட்டுத்தனமான வணக்கத்தையும் சிந்திக்காத கீழ்ப்படிதலையும் நினைவூட்டுகிறது. மற்றும் இன்றும் சில கவர்ச்சி தேவாலயங்களில் உள்ளது [குட் நியூஸ் இன்டர்நேஷனல் சர்ச்சின் தலைவரான ஜோன்ஸ்டவுன் திகில் படத்தின் மறுபதிப்பில். கென்யா தனது சீடர்களை பட்டினியால் இறக்கும்படி வற்புறுத்தியது, இயேசுவை வேகமாக சந்திக்க, பலர் செய்தார்கள். போதகர் உயிருடன் இருக்கிறார், தற்போது பிணையில் இருக்கிறார்].

ஒன் வே ஸ்ட்ரீட்டில் உள்ள வால்டர் பெஞ்சமின், 1920-களில் இத்தாலியிலுள்ள நேபிள்ஸ் நகருக்குச் சென்றபோது அவர் அனுபவித்த ஒரு உதாரணத்தை அளிக்கிறார். அநாகரிகமான குற்றங்களுக்காக ஒரு பாதிரியார் நேபிள்ஸின் வீதிகளில் வண்டியில் இழுக்கப்பட்டார். அவரைப் பின்தொடர்ந்து ஒரு கூட்டத்தினர் தூற்றினார்கள். ஒரு மூலையில் ஒரு திருமண ஊர்வலம் தோன்றியது. பாதிரியார் எழுந்து நின்று ஆசீர்வாதத்தின் அடையாளத்தைச் செய்கிறார், வண்டியைப் பின்தொடர்பவர்கள் முழங்காலில் விழுகிறார்கள். இங்குதான் நாங்கள் சென்றோம்.

ஒரு துறவி போதனையைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை. நியோபோலிடன் பாதிரியார் செய்ய வேண்டியதெல்லாம் சிலுவையின் அடையாளத்தை உருவாக்குவது போலவே, மூடநம்பிக்கையை முட்டாள்தனமாக ஒதுக்கிவிடலாம். ஆனால், எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் மற்றும் அன்பு ஆகியவற்றின் அடிப்படையிலான ஒரு போதனையின் வக்கிரத்தை ஏற்றுக்கொள்ளும் அதே பகுத்தறிவின்மையிலிருந்து, நம்பிக்கையற்றவர்களைக் கொன்றால் பரலோக பேரின்பத்தைப் பெறுகிறது. இது களனி நாகப்பாம்பு போன்ற அரசியல் சூழ்ச்சிகளை செயல்படுத்துவதன் மூலம் முட்டாள்தனத்தின் கதவுகளையும் திறக்கிறது.



ஒரு புனிதப் போருக்கான நியாயத்தை அறிமுகப்படுத்தும் மகாவம்சக் கதையில் ஒரு வித்தியாசமான பாதைக்கான குறிப்பு உள்ளது. கதை யில், துட்டுகெமுனு மன்னன் தனது வெற்றியின் செலவைக் கண்டு வருத்தப்படுகிறான். 'எனக்கு எப்படி ஆறுதல் கிடைக்கும். என்னால் லட்சக்கணக்கானோருக்கான பெரிய புரவலன் கொல்லப்பட்டதால்?' என்று புலம்புகிறார்.

மேலும் அவர் இரங்கல் தெரிவிக்கும் மரணங்கள் எதிரியின் பிரதே சத்தில் உள்ள பொதுமக்களின் மரணங்கள் கூட அல்ல .மாறாக எதிரி போராளிகளின் மரணங்களாகும் . துறவிகள் அவருக்கு வழங்கிய அறிவுரைகளை விட அவரது மனசாட்சியின் அழைப்பு புத்தரின் போத னைக்கு நெருக்கமானது. இது ஒரு நிலையான அமைதிக்கான சிறந்த பாதையை வழங்கும், மேலும் மத-இன போதை அரசியலின் வெற்றிக ரமான மீள்வருகைக்கு மிகவும் பயனுள்ள எதிர்விளைவாக இருக்கும்.

## இரட்சிப்பு பித்து

2019 ஆம் ஆண்டில், ஏறக்குறைய 70 இலட்சம் இலங்கையர்கள் தங்கள் கண்களுக்கு முன்னால் உள்ள சாட்சியங்களை புறக்கணித்து, பொருளாதார அறிவற்ற ஒருவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர், அவர் வாக்குறுதியளிக்கப்பட்ட அபிவிருத்திக்கு நிலத்திற்கு வலி யின்றி விரைவாக அவர்களை வழிநடத்த முடியும் என்று நம்பினர்.

நம்புவது ஒரு தேசிய பண்பாக மாறிவிட்டது, இது இன, மத, வர்க்க மற்றும் பிற கோடுகளுக்கு அப்பால் நம்மை ஒன்றிணைக்கிறது.

செய்ய வேண்டியதெல்லாம் அங்கியை அணிய வேண்டும்.

தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று அழைத்துக் கொண்டு, மிகவும் இலாபகரமான மத நிறுவனத்தை நடத்தும் பாதிரியார் ஜெரோம் பெர் னாண்டோ, குறிப்பாக அமெரிக்கக் கட்டமைப்பின் சுருக்கமாகத் தெரிகிறது. கவர்ச்சியான போதகர், அதை ஒரு கொள்ளைக்காரன் மீது ஆண்டவர் மற்றும் அதை லாபம் ஈட்டும் முயற்சியாக மாற்றுகிறார்.

இத்தகைய பிரசங்கிகள் தங்கள் போதனையில் அமெரிக்க முதலா ளித்துவத்தின் ஒரு குறிப்பிட்ட இழையின் துணிச்சலையும், கலப்ப டமற்ற லூத்தரிசத்தில் உள்ளார்ந்த அறிவார்ந்த, பகுத்தறிவு-எதிர்ப்பு போக்குகளையும் உள்ளடக்கி நடைமுறைப்படுத்துகின்றனர். மார்ட் டின் லூதர் சுதந்திரமான விருப்பத்தை முற்றிலுமாக நிராகரித்தார் , நம்பிக்கை மட்டுமே மூலம் இரட்சிப்பை ஆதரித்தார். அதிர்ஷ்டவசமாக உலகிற்கு, பிலிப் மெலான்ச்தான் போன்ற சிறந்த மனிதநேயவாதிக ளின் செயலில் மத்தியஸ்தம் காரணமாக புர ட்டஸ்டன்டிசம் மிகவும் சகிப்புத்தன்மை மற்றும் பகுத்தறிவு நம்பிக்கையாக உருவானது. அமெரிக்க பாணி கவர்ச்சியான போதகர்கள் இந்த முக்கிய பொது வோட்டத்திற்கு வெளியே உள்ளனர், பெரும்பாலும் பிற்போக்குத்த னமான அரசியல் மற்றும் சமூக நிலைப்பாடுகளை ஆதரிக்கின்றனர். ட்ரம்ப் முதல் போல்சனாரோ வரை வலதுசாரி ஜனரஞ்சகத் தலைவர் களுக்கு முட்டுக்கட்டை போடுவதில் புரட்டஸ்டன்டிசத்தின் இந்த வெளிப்பாட்டின் பங்கு நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

அர்ஹத் ஸ்ரீ சமந்தபத்ரராகத் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு உமாண்டாவ என்ற சிறந்த சமய வர்த்தக நிறுவனத்தைக் கட்டி யெழுப்பிய முன்னாள் பிடிடுவே சிறிதம்ம தேரரைப் பார்ப்பதன் மூலம் ஆயர் ஜெரோமைப் புரிந்து கொள்ள முடியும். ஒருவர் புத்தரின் சீடராக இருப்பதைப் போலவே கிறிஸ்துவைப் பின்பற்றுபவர். இருவருமே – அவர்களது மற்றவர்களும் – நிச்சயமற்ற காலங்களில் மக்களின் பாதிப்புகளில் வேலை செய்கிறார்கள். பயத்தையும் அறியாமையையும் இலாபமாக மாற்றுகிறார்கள்.

2002 அக்டோபர் 3 அன்று, அமெரிக்க சுவிசேஷ போதகர்கள் குழு, சதாம் ஹுசைனுக்கு எதிரான போரை ஆதரித்து ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்கு கடிதம் எழுதியது. 'லேண்ட் லெட்டர்' ஈராக் மீதான படையெடுப்பு ஒரு 'நியாயப் போர்' என்பதற்கான ஏழு கார ணங்களைக் கூறியது. பாப் உட்வார்ட் (வாட்டர்கேட் புகழ்) ஜனாதிபதி புஷ்ஷிடம் ஈராக் மீது படையெடுப்பதற்கு முன் தனது (மிகவும் அறி வார்ந்த) தந்தையிடம் ஆலோசனை கேட்டது தொடர்பாக , இளைய புஷ் பதிலளித்தார்' அவர் அறிவுரைக்காக முறையிடுவது தவறு. நான் கேட்கும் உயர்ந்த தந்தை இருக்கிறார்.'தெய்வீகக் கட்டளை யிடப்பட்ட' போரில் உலகம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தேவையற்ற மரணமும் மத பகுத்தறிவின்மை, அரசியல் பகுத்தறிவின்மைக்கு இரத்தம் வரும்போது என்ன நடக்கிறது என்பதை நினைவூட்டுகிறது.

போதகர் ஜெரோம் புத்தரை அவமதிக்க முயன்றாலும் முடியாது. புத்தர் மோசமானவரென்று அவரது முகத்திற்கு நேராக குற்றம் சாட்டப்பட்டார். மேலும் அவரது பதில் என்னவென்றால், அவர் அவமா



னங்களை ஏற்க மறுத்ததால், அவர்கள் அவற்றைச் செய்தவர்களிடம் திரும்புவார்கள். பாதிரியார் ஜெரோம் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆபத்து அரசியல் பிக்குகள் மற்றும் ஏனைய அரசியல் செயலில் உள்ள மதப் பிரமுகர்கள் (கத்தோலிக்கர்தினால் உட்பட) பிரதிநிதித்துவப்படுத்தும் அதே ஆபத்து.

அவர்களின் வார்த்தைகளும் செயல்களும் சமூகமட்டத்தில் நம்பகத்தன்மையையும் சமூக பகுத்தறிவின்மையையும் மேலும் அதிகப்படுத்துகின்றன, மேலும் 2019 ஆம் ஆண்டை மேலும் தேசிய முட்டாள்தனமாக ஆக்குகின்றன. ஆனால் குருட்டு நம்பிக்கை மற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாத கீழ்ப்படிதல் போன்ற துரோகிகளுடன் நடத்தப்பட வேண்டிய போருக்கும் சட்டத்திற்கும் சிறைவாசத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. இது இலங்கைக்கு நாம் விரும்பும் எதிர்கா லத்தைப் பற்றிய யோசனைகள் மற்றும் . மதச்சார்பற்ற நாடொன்றில் மதம் என்பது ஒரு தனிப்பட்ட வி யம் மற்றும் ஒவ்வொரு குடிமகனும் ஒரு மதத்தைப் பின்பற்ற சுதந்திரமாக இருக்க வேண்டும் இல்லை யென்றால் துன்புறுத்தல் மற்றும் சகிப்புத்தன்மையின்மையின் அடிப் படையில் கட்டியெழுப்ப முடியாது.



# வெளிநாட்டு மோகத்தில் பணத்தை இழக்கும் இளைஞர்கள்

நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு கடந்த இரண்டு வருடங்களாக ஏராளமான இளைஞர் யுவதிகள் மத்தியகிழக்கு, மற்றும் மேற்குலக நாடுகளுக்குப் போவதற்கு அதிக ஆர்வம் காட்டினார்கள் என்பது நாம் அறிந்த விடயமாகும்.

தங்களது வாழ்வாதாரத்துக்குத் தேவையான பொருளாதார தேடல்கள் சம்பந்தமாக எந்தவிதமான தொழில் வாய்ப்புகளும் இல்லாத சூழ்நிலையில் நாடு கடந்து சென்று இந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள, ஏராளமான இளைஞர் யுவதிகள் கடவுசீட்டுகளுக்காக பல நாட்கள் காத்திருந்த விடயங்கள் நாம் அறிந்ததே .

அது அவ்வாறு இருக்க, வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் எனும் போர்வையில் இடம்பெறுகின்ற பண மோசடி இளைஞர்களை பெரிதும் பாதிப்படைய வைத்துள்ளது எனலாம். எவ்வாறு சரி வெளிநாடு சென்று விடவேண்டும், என்ன வேலையாக இருந்தாலும் சரி என்கிற மன நிலையில் உள்ள இளைஞர்களை ஆசைவார்த்தை கூறி அவர்களுடைய பணத்தை வாங்கிய பின்னர் அவர்களை நிர்க்கதியாக விட்ட ஏராளமான சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது .

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் போலியாக தங்களை அடையாளப்படுத்தி கொண்டு, இளைஞர்களை மிக இலகுவாக அணுகி, அவர்களிடம் எந்த விதத்திலாவது பணத்தைப் பறித்து விடவேண்டும் என்கிற குறிக்கோளுடன் இருப்பது என்பது மிக கொடுமையான விடயமாகும் .



இரண்டு மாதங்களுக்கு முன்னர், கொழும்பில் புற நகர்ப் பகுதியில் இவ்வாறான சம்பவம் ஒன்று பதிவாகி உள்ளது . குறித்த தொழில் வாய்ப்பு முகவர் நிறுவனம் தங்களை பல ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தவர்களாக காட்டிக்கொண்டும், விளம்பரப்படுத்தி கொண்டும் மிக ஏழ்மையான நிலையில் உள்ள இளைஞர் யுவதிகளை குறிவைத்து வியாபாரத்தை ஆரம்பித்து உள்ளார்கள்.

முதலில் வேலை வாய்ப்புகள் சம்பந்தமாகவும், பிறகு கவர்ச்சிகரமான சம்பளம், பிறகு நாணயம், கட்டுப்பணம் என்பன பற்றியும் சொல்லி, பின்னர் குறிப்பிட்ட திகதியில் பணத்தையும், கடவுச்சீட்டையும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

இவை எல்லாம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், கிட்டத்தட்ட ஒரு வருடமாக எந்த ஒரு பதிலும் இல்லாத நிலையில், வேலைக்கு விண்ணப்பித்த இளைஞர்கள் குறிப்பிட்ட நிறுவனத்தை தேடி சென்று கேட்ட பொழுது இன்னும் வேலைவாய்ப்பு வரவில்லை என்று அறிவித்துள்ளது .

கிட்டத்தட்ட ஒருவருட காத்திருப்பின் பின்னர் இவ்வாறான பதிலை சற்றும் எதிர் பார்க்காத இளைஞர்கள் கதிகலங்கி போய், குறிப்பிட்ட நிறுவனத்துடன் சண்டை செய்துள்ளார்கள். இது நாடளாவிய ரீதியில் இது ஒரு ஏமாற்று வேலையாக இடம் பெறுகிறது.



மேலும் சிலர் எந்த வேலை வாய்ப்புகளும் இல்லாமல் free visa முறையில் மத்தியகிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, வேலைகள் இல்லாமல், விசாக்களை மாற்ற முடியாமல், தங்க இடம் இல்லாமல், உணவில்லாமல் என பல இன்னல்களுக்கு இளைஞர்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கு எப்படியாவது போய்விட வேண்டும் என்று கனவு கண்டு, மிகப் பெரிய தொகை கொடுத்து ஏமாந்தவர்கள் நாட்டில் ஏராளம். குறிப்பிட்ட வேலைகளுக்கு இலங்கை அரசாங்கத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளது. அவர்களுடன் நீங்கள் நேரடியாக தொடர்பு கொண்டு உங்களுடைய விடயங்களைக் சொல்லலாம். எவ்வகையான வேலை வாய்ப்புகள், சம்பளம் பற்றி பூரண தெளிவை பெற்ற பின்னர் நீங்கள் உங்களுக்கான விசா விண்ணப்பங்களை வழங்கலாம் .

பாரியளவு நிதி மோசடிகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்கிற பெயரில் இடம் பெறுகிறது. மக்களின் வறுமையைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றி இவ்வாறான நடவடிக்கைகள் இடப்பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும் .


ஐரோப்பிய நாடுகளுக்குக் கூட்டிச் செல்கிறோம் என்கிற பெயரில் எதாவது ஒரு நாட்டில் விட்டு எல்லைகள் தாண்ட வேண்டும், நதியை கடக்க வேண்டும், கடும் குளிரை பொறுத்துக்கொள்ள வேண்டும் என்கிற மிக அபாயகரமான பயணங்களைச் சந்திக்க நேரிடுகிறது . இது சம்பந்தமான ஏராளமான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் உள்ளன.

நாட்டின் சூழ்நிலை எப்படியாவது நாட்டைவிட்டு வெளியேறி விட வேண்டும் என்ற சூழ்நிலையைத் தோற்றுவித்திருப்பது என்பது உண்மைதான். ஆனாலும் ஆபத்தான இவ்வாறான பயணங்கள் எமது பணத்தை சூறையாடுவதோடு எமது வாழ்வையும் எதிர்காலத்தையும் பாழாக்கி விடுகிறது .

நீங்கள் வெளிநாட்டுக்கு பயணிப்பதற்கு முன்னர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். எந்த நாட்டுக்குப் போகப் போகிறோமோ அந்த நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை, வேலைவாய்ப்புகள் சம்பந்தமாகவும், அந்த நாட்டின் சட்டதிட்டங்கள் சம்பந்தமாகவும் தெரிந்து கொள்ளுங்கள். இவைகள் மிக பிரதானமாக நோக்க வேண்டியவை ஆகும்.

குறிப்பாக தற்போது கட்டார் போன்ற நாடுகளில் வேலைவாய்ப்புகள் அதிகமாக இல்லை. வெறுமனே இருபது நபர்களுக்கான வேலை வாய்ப்புக்காக நேர்முக தேர்வுக்கு இரண்டாயிரம் விண்ணப்பதாரிகள் சமூகமளித்த நிகழ்வு அன்று பதிவாகி இருந்தது.

ஆனால், இது சம்பந்தமாக எவ்வித தெளிவும் இல்லாமல் இங்கே வந்து வேலை தேடி கிடைக்காமல் மீண்டும் மூன்று மாதங்களில் நாட்டுக்கு சென்றவர்கள் எம்மிடத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆகவே வெளிநாடு செல்லுவதற்கு முன்னர் சரியான முகவர் நிறுவனத்தை அணுகவேண்டியதும் அது சம்பந்தமாக பூரண அறிவை பெற்றிருக்க வேண்டியதும் மிக அவசியமான ஒன்றாகும் .




## வாசகியின் மடல்...

*எழுநிலமே..!!*
*நீ*
*மேன்மேலும் எழுவாய்!!*
*தடைகள் பல தாண்டி*
*மூன்றாவது அகவையில்*
*கால் பதிக்கும் உன்னை*
*வாழ்த்துவதில்*
*மட்டற்ற மகிழ்ச்சியே!*

*உன் ஒவ்வொரு இதழும்*
*மணம் கமழும் என்*
*முற்றத்து மல்லிகையே!*
*உன் ஆக்கங்கள்*
*அனைத்தும்*
*பயனுள்ளவையே!*

*எத்தனை தடைகள்*
*வரினும்*
*அத்தனையும் கடந்து..*
*ஆழமான நம்பிக்கையோடு*
*நீ பயணிக்கும் பாதை..*
*ஆல் போல் தழைத்து,*
*அறுகு போல் வேரூன்றி,*
*மூங்கில் போல் உயர*
*என் மனமார்ந்த*
*வாழ்த்துகள்!!*

**வாசகி**



# சிறுவர்களை தேடிக் கொல்லும் நவீனம் எனும் போதை வர்த்தகம்!

இன்றைய இளைய சமுதாயம் நாளைய தலைவர்களாக மாறப் போகிறவர்கள். பிள்ளைகளின் ஆரம்பம் என்பது பாடசாலை எனும் ஒரு பெரிய சமூக ஆரம்பப் படிநிலையைக் கடந்து செல்ல வேண்டிய நிலையில் உள்ளது.

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பாடசாலைப் பராயம் மறக்க முடியாத நினைவுகளைக் கொண்டு இருக்கும். தற்போதைய மாணவ சமூகம் சமூகத்தின் பாரிய சவால்களை சந்திக்கவேண்டிய இக்கட்டான சூழலைக் கொண்டு காணப்படுகிறது. கற்றல், கற்பித்தல் விடயங்களை தாண்டி ஒரு மாணவனின் வாழ்வில் பொழுது போக்கு விடயங்கள் பாரிய தாக்கத்தைச் செலுத்தும். சமூகத்தை புரிந்து கொள்ளவும், சமூகத்தோடு பழகவும், சமூக விழுமியங்களைத் தெரிந்து கொள்ளவும் இந்தப் பொழுது போக்கு விடயங்கள் இன்றியமையாத ஒன்றாக உள்ளது என்பது உண்மையே.

தற்கால மாணவ சமூகம் நிகழ்கால விடயங்களைத் தொலைத்து, கனவு உலகில் தங்களை கதாநாயகர்களாக மாற்றி கொண்டு இருக்கிறார்கள். இந்தக் கனவு உலகம் மிகவும் அபாயகரமான நாளைய சமூகத்தை உருவாக்க கூடியது. இது சினிமாவாகவும், தொலைபேசி விளையாட்டாகவும் இளைய சமூகத்தின் மீது திணிக்கப்படுகிறது.

ஒரு கால கட்டத்தில் போதை பொருள் கடத்தல், அல்லது அது சம்பந்தமான நடவடிக்கைகள் சமூகத்துக்கு பெரும் கேடாக சினிமாக்களில் காட்டப்பட்டது. ஆனால் இன்றைய சினிமாக்கள் அது ஒரு ஹீரோயிசமான வேலையாக காட்டுகிறது, இது இளையவர்கள் மத்தியில் பாரிய ஒரு பிற்போக்கான பாதிப்பை ஏற்படுத்துகிறது. கணனி அல்லது தொலைபேசி ஆன்லைன் விளையாட்டுகளில் ஹீரோவாக காட்டப்படும் அந்த உருவம் கூட ஒரு கரடுமுரடான, இரத்தக்கறை படிந்த ஒரு உருவமாகவும், அவனைச் சுற்றி உள்ள சூழல் போதை பொருள் சம்பந்தமாகவும் இருப்பதாகவே காட்டப்படுகிறது .



அருண் செல்வராஜா

இவ்வாறான விளையாட்டுகளில் குறிப்பிட்ட உருவங்களை தாங்களாகவே உருவகப்படுத்திக் கொள்ளும் பிள்ளைகள் தங்கள் மன நிலையில் தங்களை அந்த போலி உருவங்களாக சிந்தித்து நடக்கவேண்டிய கட்டாயத்துக்கு இந்த விடயங்கள் காரணமாக அமைகிறது.

கடந்த காலங்களில் இலங்கையில் வடக்கு பகுதிகளில் பிடிபட்ட





சில சட்டவிரோத அமைப்புகளின் உறுப்பினர்கள், மிகவும் சிறு வயதினராகவே இருக்கிறார்கள். ஆக, ஒரு சமூகம் எதிர்காலத்தில் எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கப்போகிறோம் என்பதை பற்றிய கவலைகள் இல்லாமல் கனவு உலகில் தங்களை மறந்து இருக்க இவ்வாறான விடயங்கள் காரணமாக அமைகின்றன.

இந்த விடயங்களில் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் மீது எவ்வாறு தாக்கத்தை செலுத்துவது என்பதில் கூட உள ரீதியான பிரச்சனைகள் உள்ளன. தனது பிள்ளை இவற்றை பாவிக்கிறானா அல்லது இவைகள் எல்லாம் போதை பொருளா என்கிற ஒரு குழப்ப நிலையை கூட இந்த விடயங்கள் பெற்றோரிடத்தில் ஏற்படுத்தும். ஆக, ஒரு சமூகத்தின், மாற்றம் என்பது சிறுவர்கள், இளைஞர்களின் மாற்றமாகவும் சிறுவர்களின், இளைஞர்களின் புரிதல் என்பது நாளைய சமூகத்தின் வெளிப்பாடாகவும் அமையும்.

இது இவ்வாறு இருக்க இந்த நடவடிக்கைளை மையமாகக் கொண்டு போதைப் பொருள் வர்த்தகம் என்பது பரவலாக இடம்பெறுகிறது.

ஒரு வர்த்தகத்தின் ஆரம்பம் அந்த பொருளின் மீது மக்களின் ஆர்வத்தை தூண்டுவது ஆகும். ஆகவே இவ்வாறான விடயங்கள் மூலம் போதைப் பொருள் பற்றிய சிந்தனைகளை இளையவர்கள் மீது திணித்து அதன் மூலம் தமது வியாபார உத்திகளை யாரோ ஒருவர் எங்கோ இருந்து இயக்குகிறார் என்பதை சமூகம் புரிந்து கொள்ள சில நாட்கள் எடுக்கும்.

போதைப் பொருட்கள் என்றால் பெரும் செலவில் வாங்குவதை தவிர்த்து, நமது ஊர் வியாபாரிகள் மாணவர்களை குறி வைத்து சிகரெட், பீடி, கஞ்சா, பாக்கு, புகையிலை, தூள் (மூக்குப்பொடி) போன்ற பொருட்களை விற்பனை செய்கிறார்கள். இது சம்பந்தமாக காவல் துறை நடவடிக்கை எடுத்தாலும் அது போதுமானதாக இல்லை என்பதே உண்மை. இவைகளை பாவித்தால் சமூகத்தில் தனக்கு மதிப்பு, தான் ஒரு தாதா என்கிற ஒரு மனநிலைக்கு இவர்களை மாற்றியமைக்க ஒரு பெரிய வர்த்தக கோர்வையை இந்த சமூகம் மாற்றியுள்ளது .

நாம் சாதாரணமாக கடந்து போகும் சிறு விடயங்களில் மிகப்பெரிய பாதிப்புகள் உள்ளதை நாம் உணரவேண்டும். இதற்காக ஒட்டுமொத்த விடயங்களையும் நான் குறை சொல்லவில்லை. ஆனால், அவற்றைத் தேட வேண்டிய கட்டாயம் உள்ளதை உணரவேண்டும். சமூகத்தில் இது சம்மந்தமாக உரையாடல்கள் அதிகமாக வேண்டும். இது சம்பந்தமாக விழிப்புணர்வுகள் பரப்பப்பட வேண்டும்.

இதனால் பாதிக்கப்பட்டவர்களோ அல்லது கனவு உலகத்தில் வாழும் சிறுவர்களோ முதலில் தங்களைத் தாங்களே உணர்ந்து கொள்ளும் அளவுக்கு சமூகத்தை மாற்ற வேண்டியது



**சமூக நடவடிக்கை, அல்லது விளையாட்டு போன்றவற்றில் சிறுவர்களுக்கான ஆர்வத்தைத் தூண்ட வேண்டியதும், அதிகப்படியான தொலைபேசி அல்லது கணனிப் பாவனையை மட்டுப்படுத்துவதும் மிக அவசியமான ஒன்றாகும். இவற்றைக் கட்டுப்படுத்துவது மிக இலகுவான விடயமல்ல. சிறுவர்களுக்கான புரிதல் என்பது மிகவும் குறைவு. எது சொன்னாலும் அவற்றை தவறாக புரிந்து, சொல்லுவதற்கு நேர் எதிர் திசையில் பயணிக்கும் மனப்பாங்கு உள்ள வயது. அதைப் பக்குவப்படுத்தி, ஒரு புரிதல் நிலைக்கு கொண்டு வந்து, அவர்களுக்கான விழிப்புணர்வுகளை வழங்குவது மிகவும் அவசியமான ஒன்றாகும்.**

பெற்றோர்களின், சமூகத்தின் தலையாய கடமையாகும்.

சமூக நடவடிக்கை, அல்லது விளையாட்டு போன்றவற்றில் சிறுவர்களுக்கான ஆர்வத்தைத் தூண்ட வேண்டியதும், அதிகப்படியான தொலைபேசி அல்லது கணனிப் பாவனையை மட்டுப்படுத்துவதும் மிக அவசியமான ஒன்றாகும். இவற்றைக் கட்டுப்படுத்துவது மிக இலகுவான விடயமல்ல. சிறுவர்களுக்கான புரிதல் என்பது மிகவும் குறைவு. எது சொன்னாலும் அவற்றை தவறாக புரிந்து, சொல்லுவதற்கு நேர் எதிர் திசையில் பயணிக்கும் மனப்பாங்கு உள்ள வயது. அதைப் பக்குவப்படுத்தி, ஒரு புரிதல் நிலைக்கு கொண்டு வந்து, அவர்களுக்கான விழிப்புணர்வுகளை வழங்குவது மிகவும் அவசியமான ஒன்றாகும்.



# படைப்பின் இலட்சியமே சமுதாயத்தின் தேவை!

## மலையக இலக்கியவாதி அந்தனி ஜீவா!




(படைப்பின் இலட்சியம் சமுதாயத்தின் தேவையாக இருக்கவேண்டும். அதில் மண்ணின் மணம் இருக்க வேண்டும். கலைஞன் மானுடம் படைக்கும் ஆத்மாவின் ராகமாகத் திகழ வேண்டும் என்ற தமது கூற்றின் வழி இன்றும் இலக்கியம் படைத்து வரும் அந்தனி ஜீவாவின் புகழ் ஈழத்து மலையக இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். மே 26 இல் 79 வது அகவையில் காலடி எடுத்துவைக்கும் அந்தனி ஜீவாவை (மே26, 1944) வாழும்போதே வாழ்த்துவோமாக! )

**ஐங்கரன்**

எழுத்தாளர், நாடக ஆசிரியர், நாடகக் கலைஞர், நாடக இயக்குநர், தொழிற்சங்க செயற்பாட்டாளர், இதழாளர், பதிப்பாளர், சிறுகதை ஆசிரியர், முற்போக்குச் சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமை படைத்த அந்தனி ஜீவா 2010 இல் எதிர்வு கூறலால் மலையகத்தில் விழிப்புணர்ச்சி உருவாகியது.

மலையக மக்களின் வாசிப்புத்திறன் மிகக் குறைந்து விட்டது. வாசிப்பதே இல்லை என்ற அளவிற்கு நிலைமை மாறிவிட்டது. ஒப்பிட்டளவில் இலக்கியம் மொழி ஆகிய துறைகளில் ஏனைய சமூகங்களைவிட மிக பின்தங்கி விட்டதாக மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா 2010 ஆகஸ்டில் அன்றைய நிலமையினை எடுத்துக் கூறினார்.

பாடசாலை மட்டத்தில் மொழி வளர்க்கப் படுவது குறைந்து விட்டது. வாசிப்பும் இல்லை தமிழ் மொழி வளர்க்கப்படுவதுமில்லை என்றால் இலக்கியவாதிகளால் என்ன செய்ய முடியும்? நாமே பாதை வெட்டி பயணிக்கும் காலத்திற்குத் தள்ளப்பட்டு விட்டோம்.

ஏனைய சமூகங்கள் ஏற்கனவே வெட்டப் பட்ட பாதையில் நீண்ட தூரம் சென்று கொண்டிருக்கின்றனர். அதுவும் கரடு முரடு இல்லாத பாதை. எமது நிலை கவலைக்கிடமாக உள்ளது. ஓரிரு நல்லெண்ணம் படைத்த பெருந்தகைகளால் ஏதோ பயணம் தொடர்கிறது என கொழுந்து சஞ்சிகை கண்டி இந்து காலாச்சார மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட போது உரை நிகழ்த்திய சஞ்சிகையின் ஆசிரியர் அந்தனி ஜீவா விசனப்பட்டார்.


மலையகத்தில் நீண்ட காலமாக 'கொழுந்து' சஞ்சிகையை 31 ஆவது இதழ் வரை 20க்கும் மேற்பட்ட வருடங்கள் தனிமனிதனாக இருந்து வெளியிட்டு வருவது என்பது கற்பனை செய்ய முடியாத ஒன்றாகும்.

மலையக எழுத்துக்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளிலும் பங்களித்து வரும் அந்தனி ஜீவா 1944 மே 26 இல் பிறந்தார். கலையையும், இலக்கியத்தையும் வெறும் பொழுதுபோக்குக்காக அல்லாது, சமூக விழிப்புணர்வுக்கான ஊடகமாகக் கருதித் தமது பணியை மேற்கொண்டு வருபவர்.

கொழும்பைப் பிறப்பிடமாகவும் மலையகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எழுத்தாளரும் கவிஞருமாக அந்தனி ஜீவா விளங்குகிறார்.

### சமூக விழிப்புணர்வின் ஊடகர்:

கொழும்பு சுவர்ண வீதியிலிருந்த தமிழ்ப் பாடசாலையிலும் பம்பலப்பிட்டி புனித மரியாள் கல்லூரியிலும் கல்வி கற்ற அந்தனி ஜீவாவின் தந்தை செபஸ்டியன் தாய் லட்சுமி அம்மாள் ஆவார்.



1960 இல் எழுதத் தொடக்கிய இவர் கண்டியூர் கண்ணன், மாத்தளை கௌத மன், கவிதா ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். சுதந்திரன், மாணவன், தமிழ ருவி, திருமகன், கலைமலர், மாணவமலர், மாலைமுரசு, ஈழநாடு, சிந்தாமணி, சிரித்தி ரன், அமுதம், தேசபக்தன், நவமணி, தினகரன் உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதியுள்ளார். நாடகத்துறையிலும் பங்களித்துவரும் இவர் எழுதிய முதல் நாடகமான 'முள் ளில் ரோஜா' 1970 இல் மேடையேறியது. 1970களில் தொழிலாளர் வர்க்கப் பிரச் சனைகளைக் கருப்பொருளாகக் கொண்ட அக்கினிப்பூக்கள், வீணை அழுகின்றது முதலான நாடகங்களை உருவாக்கினார்.

இவற்றில் வீணை அழுகின்றது என்ற நாடகத்திற்கு சிறிலங்கா அரசு தடை விதித் ததும் நாடே அறிந்ததே. அத்துடன் 1980 களில் தெரு நாடகங்களைக் கொழும்பு, மலையகப் பகுதிகளில் நடாத்தி உள்ளார்.


## மலைய இலக்கியத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்:

மலையக இலக்கியங்களையும், இலக்கி யக் கர்த்தாக்களையும் இலக்கிய உலகிற்கு அறிமுகப் படுத்தியவர் என்ற பெருமையும் அந்தனி ஜீவாக்கு உண்டு.

மலையகத்தில் தமிழ் வளர்த்தோரும், கலை வளர்த்தோரும், மலையக மக்களிடம் உரத்த சிந்தனைகளை விதைத்தோரும், மலையக மக்களின் விடுதலைக்கு உழைத் தோரும் எனப் பன்னிருவர் பற்றிய தகவல் கள் அடங்கிய 'மலையக மாணிக்கங்கள்' என்னும் நூலை 1998 ஆம் ஆண்டு கொழும்பு துரை வெளியீடாக கொண்டு வந்தார். அந்நூலில், மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த முன்னோ டிகளான கோ. நடேசய்யர், மீனாட்சி அம் மையார், பெரி. சுந்தரம், இராமானுஜம், ஜெ.எஸ். பெரோ, ஜார்ஜ் ஆர். மேத்தா, மலையக காந்தி ராஜலிங்கம், வி.கே. வெள்ளையன், சி.வி. வேலுப்பிள்ளை, ஏ. அஸீஸ், சோமசுந்தரம், அசோகா பி.டி. ராஜன் ஆகியோர் பற்றிய சிறப்பான பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

## மலையக இலக்கியச் சுடர்

கொழும்பு நாவல திறந்த பல்கலைக் கழ கத்தில் பத்திரிகைத் துறையில் டிப்புளோமா பட்டம் பெற்ற அந்தனி ஜீவா தினபதி, செய்தி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார்.




கொழுந்து, குன்றின் குரல் சஞ்சிகை களின் ஆசிரியராகவும், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் வெளியிட்ட ஜனச க்தி என்ற மாத இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

அன்றைய இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி 31.10.1984 அன்று சுட்டு கொல்லப்பட்டதன் எதிரொலியாக தினக ரன் இதழின் வார மஞ்சரியில் 'அன்னை இந்திரா' தொடராக எழுதிய கட்டுரைக ளின் தொகுப்பானது நூலாகவும் வெளி வந்தது.

அத்துடன் ஈழத்தில் தமிழ் நாடகம் (1981), அன்னை இந்திரா (1985), காந்தி நடேசையர் (1990), மலையகமும் இலக்கியமும் (1995), முகமும் முகவரி யும் (1997), மலையக மாணிக்கங்கள் (1998), அக்கினிப் பூக்கள் (1999), சி. வி. சில நினைவுகள் (2002) குறிஞ்சிக் குயில்கள் (2002), மலையகத் தமிழ் இலக் கியத்திற்கு முஸ்லீம் எழுத்தாளர்களின் பங்களிப்பு (2002), மலையகம் வளர்த்த கவிதை (2002), கண்டி மாவட்டத் தமி ழர்களின் வரலாற்றுப் பதிவுகள் (2002), திருந்திய அசோகன் (2003), நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம் (2003), மலை யகத் தொழிற்சங்க வரலாறு (2005), சிறகு விரிந்த காலம் (2007), ஒரு வானம் பாடியின் கதை (2014) போன்ற நூல்களை அந்தனி ஜீவா எழுதியுள்ளார்.


## கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியர்:


மலையக எழுத்துக்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளிலும் பங்களித்து வரும் அந்தனி ஜீவா, தான் செயலாளராகப் பணியாற்றும் மலையக வெளியீட்டகம் மூலம் பல நூல் களை வெளியிட்டுள்ளார். அந்தனி ஜீவா கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி உள்ளார்.

மலையக பெண்களின் எழுத்துக்களை தொகுத்து குறிஞ்சி மலர்கள் (சிறுகதை கள், 2000), குறிஞ்சிக் குயில்கள் (கவிதை கள், 2002), அம்மா(சிறுகதைகள், 2004) போன்ற தொகுப்புக்களையும் வெளியிட் டுள்ளார். அத்துடன் இவர் அரச சாகித்திய விருது, அரச இலக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

## மலையகமும் இலக்கியமும் நூல்:

'மலையகமும் இலக்கியமும்' என் னும் நூலில் மலையக இலக்கியத்தின் வரலாற்றுப் பின்னணி, வாய் மொழி






இலக்கியம், மலையகமும் கவிதையும், மலையகமும் சிறுகதையும், மலையகமும் நாவல்களும், மலையகமும் கலைகளும் முதலிய தலைப்புகளில் மலையக இலக்கிய வரலாற்றை விரிவாக அந்தனி ஜீவா பதிவு செய்துள்ளார்.

மலையகக் கவிதைகளின் வளர்ச்சி பற்றி கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக தாம் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'மலையகம் வளர்த்த கவிதை' என்னும் நூலை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் வாயிலாக 2002 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

மலையக இலக்கிய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்து வரும் 12 பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து 'குறிஞ்சி மலர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டவர் அந்தனி ஜீவாவே.

மலையகத்தின் தேர்ந்த 21 பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுத்து 'குறிஞ்சிக் குயில்கள்' என்னும் நூலினை 2002 ஆம் ஆண்டு உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு கொண்டு வந்தார்.

'அம்மா' என்ற தலைப்பில் 25 இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து, சென்னை கலைஞன் பதிப்பகத்தின் மூலம் கொண்டு வந்தார். 'புதிய வார்ப்புகள்' என்ற வரிசையில் இளைய தலைமுறை எழுத்தாளர்களையும், 'பெண் பிரம்மாக்கள்' என்ற தலைப்பில் பெண் படைப்பாளர்களையும் கொழுந்து இதழ்களில் அறிமுகப்படுத்தியவர் அந்தனி ஜீவா.

மலையக இலக்கியத்திற்கு புத்துயிர் அளித்த அந்தனி ஜீவா கலை இலக்கியச் செயற்பாடுகள் எனக்களிப்பது ஊதியமல்ல, உயிர் என்ற உயர்ந்த லட்சியத்தை மனதில் ஏற்றுச் செயல்பட்ட பெருமைக்குரியவர்.


## ஈழத்து நாடக மேடையில் புதிய வீச்சு:

அந்தனி ஜீவா ஈழத்து நாடக மேடையில் புதிய வீச்சுக்களையும், புதிய தரிசனங்களையும் கொண்ட நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

மலையகத்தில் 1980 களில் வீதி நாடகங்களை முதன் முதலில் ஆரம்பித்தவர் என்ற பெருமை அந்தனி ஜீவா அவர்களையே சேரும்.

இவர் 1980 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்குச் சென்று வீதி நாடக முன்னோடியான பாதல் சர்கார் சென்னையில் நடத்திய பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்றார். மக்களுடன் நேரடியானதும், நெருக்கமானதுமான தொடர்பினை ஏற்படுத்தும் சிறந்த கலை ஊடகமான தெரு நாடகங்கள் அந்தனி ஜீவாவின் முயற்சியால் மலையகத்தில் புத்துயில் பெற்றது.

இவரின் 'வீணை அழுகிறது' என்ற




சமூக நாடகம் பெரிய இடத்து அரசியல் வாதிகளின் தோலை உரித்துக் காட்ட முனைந்ததால், அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டதும் தெரிந்ததே. அலைகள்' நாடகம் இலங்கை கலாச்சாரப் பேரவை 1978ஆம் ஆண்டு நடத்திய தேசிய நாடக விழாவில் இரு விருதுகளைப் பெற்றது.

அத்துடன் கொழும்பிலும், மலையகத்திலும் பல வீதி நாடகங்களை நடத்தியுள்ளார். இலங்கை இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் 1994 ஆம் ஆண்டு நடத்திய தமிழ் நாடக விழாவில் இவரது 'ஆராரோ ஆரிவரோ' என்ற நாடகம் விருது பெற்றது. மகாகவி பாரதி, ஆராரோ ஆரிவரோ, கவிதா, பறவைகள், வெளிச்சம், சாத்தான் வேதம் ஓதுகின்றது, ஒன்று எங்கள் ஜாதியே, அக்கினிப் பூக்கள், தீர்ப்பு, வீணை அழுகின்றது, முள்ளிள் ரோஜா, அலைகள், பறக்காத கழுகுகள் முதலிய நாடகங்கள் உட்பட 14 நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

## ஈழத்தில் தமிழ் நாடகம்:

'முள்ளில் ரோஜா' என்ற பெயரில் அந்தனி ஜீவா எழுதி இயக்கிய நாடகம் 1970 ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்ட முதல் நாடகமாகும். இந்நாடகம் அந்தனி ஜீவாவை ஈழத்து தமிழ் நாடக உலகில் பரவலாக இனம் காட்டியது.

'ஈழத்தில் தமிழ் நாடகம்' என்னும் நூலில் உலக நாடக மேடை, தமிழ் நாடக மேடை, நாட்டுக் கூத்து முதலிய தலைப்புகளில் நாடகங்களின் வளர்ச்சி மற்றும் நாட்டுக் கூத்தின் செழுமை, வளமை குறித்து பதிவு செய்துள்ளார். மேலும் ஈழத்தில் தமிழ் நாடக வளர்ச்சிக்கு பாடுபட்ட

சி.வை.தாமோதரம் பிள்ளளையவர்களின் புதல்வரான வண.பிரான்சிஸ் கிங்ஸ்பரி, விபுலாந்த அடிகள், பேராசிரியர் க.கணபதி பிள்ளை, பேராசிரியர் சரத் சந்திரா, அ. ந, கந்தசாமி, பேராசிரியர் சு.வித்தியானந்தன், கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வைரமுத்து, நடிகவேல் லடீஸ் வீரமணி முதலியவர்களின் நாடகப் பணிகளையும், நாடகத்திற்கு அவர்கள் ஆற்றிய தொண்டுகளையும் பதிவு செய்துள்ளார்.

படைப்பின் இலட்சியம் சமுதாயத்தின் தேவையாக இருக்க வேண்டும். அதில் மண்ணின் மணம் இருக்க வேண்டும். கலைஞன் மானுடம் படைக்கும் ஆத்மாவின் ராகமாகத் திகழ வேண்டும் என்ற தமது கூற்றின் வழி இன்றும் இலக்கியம் படைத்து வரும் அந்தனி ஜீவாவின் புகழ் ஈழத்து மலையக இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.





# தோழா!!

தோழா!
விதி என்பது இதுதானா?
நேற்றுவரை ஓடிய உன் கால்கள்,
இன்று சக்கர நாற்காலியில்.
பயப்படாதே.
துவண்டு போகாதே!
துணிந்து நில்!!

சிறு உளி ஒரு மலையை
செதுக்கும் வலிமை உள்ளது!
உன் உள்ளம் உயர்வானது!
உன் எண்ணங்கள்
உயர்வானவை!!

எழுவாய்!! மிக விரைவில்!!
துயரினை தூர வை.
மனிதமற்ற செயலாலே
வாழ்க்கை சக்கர நாற்காலியில்

மனமுடைந்து முடங்காதே..
துணிவோடு எதிர்த்து போராடு.
வானமும் உன் வசப்படும்.

நிலையில்லா மனித வாழ்வு.
நிம்மதியை இழக்காதே.
அறிவோடு செயல்படு.
அகிலத்தை வென்றிடுவாய்!!

மன ஊனமாக
வாழ்வதை விட
வலுவிழந்து வாழ்தல்
சிறப்பே!!

வலுவிழந்தோர் பலர்
சாதனை புரிந்தவர்கள்..
சரித்திரத்தில் வாழ்கிறார்கள்!
நாளைய விடியல்

உனக்கானது..!!
கைகளில் வலுவுண்டு
கண்ணீரைத் துடைத்து விடு!
மனத்துணிவோடு
வாழ்வில் எதிர் நீச்சலடி!!
நிச்சயம்!!
வெற்றி மகள்
உன்னிடம் சரணடைவாள்!

தோழா!
உன் விடியல்
உன் கண்ணெதிரே
நம்பிக்கையோடு
அழைக்கிறது.
சென்று வா!
வென்று வா!!

கலை



# ‘நல்ல தாய்’ எனும் கைவிலங்கு

ஒரு பெண் தான் ஒரு நல்ல தாய் என்பதை தனக்கும் தன் குடும்பத்திற்கும் இந்த சமூகத்திற்கும் உணர்த்துவதற்காக கொடுக்கும் விலை மிக அதிகமானது. அதற்காக தன் வாழ்நாள் முழுவதையும் செலவிடுகின்றாள் அவள். சரியாகச் சாப்பிடாமல், சரியான நேரத்திற்கு தூங்காமல் பிள்ளைகளுக்காக, பிள்ளைகளின் வளர்ச்சிக்காகவே தங்கள் நேரத்தைச் செலவிடும் தாய்மார்கள்தாம் இங்கே அதிகம். தம்பதிகள் இருவரும் இணைந்து குழந்தையை ஆசை ஆசையாக பெற்றெடுத்தாலும் அவர்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு பெண்கள் மீது மட்டுமே திணிக்கப்படுகிறது என்பதுதான் உண்மை.

பழங்கால சமூக பழக்க வழக்கங்களில் இருந்து நாம் எவ்வளவு முன்னேறி வந்திருந்தாலும் குழந்தை வளர்ப்பு விஷயத்தில் இன்றளவும் எந்தப் பெரிய மாற்றமும் ஏற்படவில்லை. உலகளவிலும் குழந்தைகளை வளர்ப்பது பெண்களுக்கு கொடுக்கப்பட்ட கடமையாகவே ஆண்களால் பார்க்கப்படுகிறது. பாலின சமத்துவம், அடிப்படை உரிமை எனப் பேசினாலும் பெண்களுக்கான சம உரிமையையும், சமத்துவத்தையும் கொடுக்க இந்த சமூகம் தயாராக இல்லை. இதற்கு முக்கிய காரணம், சமூக அமைப்பில் ஆண் குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் சிறப்பு அந்தஸ்தும் பெண் குழந்தைகளின் மேல் சிறுவயது முதல் திணிக்கப்படும் கடமைகளும்தான் என்றால் மிகையாகாது.

வீட்டு வேலை என்றால் பெண் குழந்தைகள் மட்டுமே செய்ய வேண்டும். ஆண் குழந்தைகளாக இருப்பவர்கள் தங்களின் துணிகளைக் கூட துவைத்துக் கொள்ள மாட்டார்கள், அவர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்ற சுதந்திரம் பிறப்பிலிருந்து வழங்கப்படுகிறது. குழந்தை பிறந்த பிறகு, அவர்களை குளிப்பாட்டுவது முதல் அன்றாடம் கவனித்துக் கொள்வது வரை அத்தனையும் பெண்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்பாகவே இருக்கிறது. குழந்தைகள் அழுதால் கூட நள்ளிரவில் பெண்கள் எழுந்து, தன் குழந்தையை சமாதானம் செய்து தூங்க வைக்க வேண்டும். அநேகமாக எல்லா இடங்களிலும் ஆண்கள் வெறும் பார்வையாளராக மட்டுமே இருக்கிறார்கள் என்பது கவலைக்குரியதே .

தாய்மை, தியாகம் என்ற சொற்களில் மட்டுமே மனம் குளிர்ந்து போய் பெண்கள், பிள்ளை பெறுவதில் தொடங்கி குழந்தைகளின் ஆரோக்கியம், கல்வி, சாதனைகள், குழந்தைகளின் எதிர்காலம் என ஓடிஓடி உழைத்தே தலை நரைக்க ஆரம்பித்து விடுகிறது. இதெல்லாம் அவர்களுக்குப் பிரச்சனை இல்லை. ‘உங்கள் பிள்ளை சுத்த தங்கம், இப்படி ஒரு பிள்ளை பிறக்க நீங்க கொடுத்து வைத்திருக்கணும், உங்க பிள்ளை நீங்க வாங்கி வந்த வரம்’ போன்ற ஓரிரு வாக்கியங்களைக் கேட்க வேண்டும் என்பதே அவர்கள் வாழ்நாள் தவம். அதைக் கேட்பதற்காகவே இங்கே தன் வாழ்நாள் முழுவதையும் பல பெண்கள்





தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நவீன காலத்திலும் கூட, 'இதெல்லாம் ஒரு பிரச்சினையே இல்லை, இதெல்லாம் பெண்ணாய் பிறப்பெடுத்தவளின் கடமை, அந்தக் கடமையிலிருந்து இம்மியளவேனும் விலகிவிடக் கூடாது' என்கிற வகையில்தான் அன்று தொட்டு இன்றுவரை இந்த சமூகத்தில் பெண் நோக்கப்படுகின்றாள். 'பிள்ளை இருக்கும் வீட்டில் தலை வாரக்கூட நேரமிருக்காது' என்கிற பழைய கருத்தாக்கம் இன்றுவரையில் உலவிக்கொண்டுதான் இருக்கிறது அதாவது பிள்ளைகள்தான் முக்கியம், இனி உனக்காக அல்ல அவர்களுக்காக வாழ்வதே மிகச் சிறந்த வாழ்க்கை எனத் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டு அதிலிருந்து இம்மியளவேனும் பெண் நகர்ந்துவிடாதபடி இறுகக் கட்டப்பட்டுவிடுகிறாள்.

இந்த தூய்மையான தாய்மைப் போதையிலிருந்து ஒரு பெண் கொஞ்சமேனும் சுதாகரித்து தனக்காகவும் சிறிது நேரத்தை ஒதுக்க நினைப்பாளேயாயின் அவள் பயங்கர குற்றவுணர்விற்கு உள்ளாக்கப்படுவாள் என்பதே யதார்த்தம். இருபத்து நான்கு மணிநேரமும் குழந்தை பராமரிப்பு வீட்டு பராமரிப்பு என உழன்று கொண்டேயிருக்கும் பெண் எப்போதாவது அழுத்தம் தாளாமல் வெடித்து குமுறும்போது அந்த நியாயம் எத்தனை பேரின் செவிகளுக்குள் ஏறக்கூடும்?

தெளிந்த அறிவுள்ள சமூகமாக இருக்கும் இன்றைய காலகட்டத்தில் குழந்தை வளர்ப்பு என்பது ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது என சமூகம் உணர வேண்டும். குழந்தையை வளர்க்கும் போது, மனைவியின் பொறுப்பு என கணவர்கள் ஒதுங்கிக்கொள்ளாமல், என்னுடைய குழந்தை என்ற பொறுப்பை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு கவனித்து கொள்ள வேண்டும் என்பதே இங்கே பல இளம் தாய்மார்களது எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஏன் யுகம்தோறும் பல தாய்மார்களதும் எதிர்பார்ப்பும் இதுவாகத்தான் இருந்திருக்கக் கூடும். ஆனால் அவர்கள் அதை வாய்விட்டுக் கேட்கவில்லை என்பதுதான் உண்மை.

ஒரு குழந்தை வளரத் தொடங்கும் போதே, அம்மாவைப் பார்ப்பதற்கும் அப்பாவைப் பார்ப்பதற்கும் பெரிய வேறுபாடுகளை இயல்பாகவே கற்றுக் கொள்கிறது. அப்பா நல்ல உடைகளை அணிந்து கொண்டு வேலைக்குச் செல்கிறார். குடும்ப பொருளாதாரத்தைப் பார்த்துக் கொள்கிறார். அம்மா வீட்டு வேலைகளை மட்டும் செய்யக் கூடியவள். எப்போதும் வேலை செய்து கொண்டு, அழுக்கு உடை, உச்சிக்கொண்டை என வியர்வை நாற்றத்தோடு எஞ்சியதை உண்டு வாழக் கூடியவளாக குழந்தையின் மனதில் பதிகிறது இன்றும் அநேக இல்லங்களில். இது மாறவேண்டும். இந்த மாற்றம் நிகழ பெண்கள் மட்டுமே குழந்தை வளர்ப்பில் வீட்டு பராமரிப்பில் காலந்தோறும் உழன்றுகொண்டிருக்க வேண்டும் என்கிற பார்வை மாறவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக 'உனக்கு என்ன தெரியும்? என்னதான் செய்கிறாயோ இவ்வளவு நேரமா? வீட்டில் தானே இருக்கிறாய் அப்படியென்ன வேலை?' போன்ற உச்சகட்ட எரிச்சல் வார்த்தைகளை கணவர்கள் கேட்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.





# மதிப்பிற்குரிய பெருந்தளபதியின் நினைவுகள் சுமந்து!!

அ.வி.முகிலினி

**சொர்ணம் அண்ணா!**
**இந்தப் பெயரில்தான் எத்தனை மிடுக்கு.**

பள்ளிப் பருவங்களில் நாங்கள் புகைப்படங்களில் பார்த்து வியந்த கதாநாயகன். ஒரு முறையேனும் கதைத்து விட மாட்டோமா என ஏக்கம் கொண்டிருந்தோம். இவர் உலகமே வியந்து போற்றும் தேசியதலைவரை பாதுகாக்கும் பணியை, பொறுப்புடன் ஏற்று சிறப்புடன் திறம்பட கடமையாற்றிய தளபதி. அவருக்கே உரிய மிடுக்குடன் கூடிய நடையும், தோற்றமும், என்னைப்போல் பலரையும் கவர்ந்தன.

நான் என் கல்வியை முடித்து, குறிப்பிட்ட வேலைத் திட்டங்களைச் செய்து கொண்டு 1998 இல் தாயகம் சென்றேன். அது 'ஜெயசிக்குறு' சமர் நடந்த காலமாகும். இராணுவம் ஒட்டிசுட்டான் வரை முன்னேறி இருந்தது.

இதே வேளை, பெயரிடப்படாமலே ஓயாத அலை மூன்றின் ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டன. இராணுவத்தின் அடுத்த நகர்வு ஒட்டிசுட்டான் – புதுக்குடியிருப்பு வீதியென கணிக்கப்பட்டதால், ஒட்டிசுட்டான் முக்கிய தளமாக இருந்தது. இதன் பொறுப்பு சொர்ணம் அண்ணாவிற்கு வழங்கப்பட்டது.

ஓயாத அலை 3 இன் எதிர்சமர் இங்கிருந்தே ஆரம்பமானது. இச் சமரின் தொடக்க வேலைகளைச் செய்து, ஒட்டிசுட்டானை உடைத்து, எதிரிகளை ஓட ஓட விரட்டி பெரும் வெற்றிக்கு சொர்ணம் அண்ணாவே வழி வகுத்தார் என்பதையும் நான் அறிந்தேன்.

ஆண்டுகள் மெதுவாக கடந்து, 2002ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தேசியத் தலைவரால் சொர்ணம் அண்ணனுக்கு நான் அறிமுகம் செய்யப்பட்டேன். ஒரு முறையாவது சந்திக்க மாட்டோமா என நினைத்த தளபதியுடன் நெருங்கிப் பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்ததில் பெரு மகிழ்வும் பெருமிதமும் கொள்கிறேன்.

வான்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சங்கர் அண்ணாவின் வீரச்சாவின் பின் வான்புலிகள், தலைமையில் ஒரு வெற்றிடம் உருவானது. எமது படையணி பெரு வளர்ச்சி நோக்கிப் பயணித்த காலம் அது. இக் காலத்தில் கேணல் சங்கர் அண்ணாவின் இழப்பு பேரிழப்பாகும்.

இதனால் வான்புலிகளை தொய்வில்லாமல் கொண்டு செல்ல வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டது. தேசியத் தலைவரின் பணிப்பிற்கமைய, மிகவும் திறன்பட செயலாற்றும் சொர்ணம் அண்ணா வான்புலிகளின் சிறப்புத் தளபதியாக நியமிக்கப்படுகிறார். காடு சார்ந்த இடங்களில் எம் பணி நடைபெற, அவரது முன்னனுபவங்கள், வழிகாட்டல்கள் எமக்கு பாடமாகவும் வரப்பிரசாதமாகவும் அமைந்தன என்றே சொல்லலாம்.

தேசியத் தலைவருடன் நெருங்கிப் பயணித்து அவர் சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் தளபதியுடன் பயணிக்கும் வாய்ப்பை நோக்கிச் சென்றேன் நான். புதுக்குடியிருப்பிலுள்ள அவரது தளத்திற்கு சென்ற என்னை அவரே வரவேற்று, விருந்துபசாரம் செய்து வெளிநாட்டு நிலவரங்களைக் கேட்டு அறிந்து கொண்டார்.

சொர்ணம் அண்ணா, தேசியத் தலைவர் கையளித்த வான்புலிகளின் பொறுப்பை கேணல் சங்கர் அண்ணா விட்ட இடத்திலிருந்து நிரப்பி, அடுத்த கட்ட நகர்வுக்கு நம்மை சிறப்புடன் கொண்டு சென்றார். அவரது ஆளுமை போன்ற விடயங்களை அவரிடமிருந்து நாம் கற்றுக் கொண்டோம்.

வான்புலிகள் காட்டில் இயங்கிக் கொண்டிருந்த நிலையில், விமானங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தி, நெருக்கடியான நேரங்களில் எவ்வாறு செயற்பட வேண்டுமென அதையும் செயல்வடிவில் தெளிவாக நமக்கு கற்றுத் தந்தார் அவர். பெரும் தரைச் சண்டைகளை திறம்பட நடாத்தும் வல்லமை மிக்க தளபதிக்கு, ஆகாய தரைச் சமர்களை





ஒழுங்கமைத்து நடாத்த வான்படை சார்ந்த அறிவையும் பெற வேண்டி இருந்தது. அத்துடன் வான்புலிகளின் போராளிகளை, சீர்படுத்தி ஒப்ப டைக்கும் பொறுப்பையும் சொர்ணம் அண்ணரே ஏற்றிருந்தார்.

ஒரு நாள் எனையழைத்து 'நான் தொடர்ந்து இப் பொறுப்பில் இருக்க மாட்டேன். எனக்கு வேறு பொறுப்புக்கள் உள்ளன. நீங்கள் இதனை தெளிவாகக் கற்றுக் கொள்ளுங்கள்' என்றார். போராளிக ளின் பாதுகாப்பு, மனங்கள் தொய்வடையாமல் பார்த்துக் கொள்வது போன்ற நிர்வாக முறைகளை செவ்வனே கற்று தந்தார். ஒரு நாள் என்னை மணலாற்றுக் காட்டிற்கு அழைத்துச் சென்று தளபதி பால் ராஜ் அண்ணாவை நோக்கி 'லீமா! இவர் யாரென்று தெரியுமா? இவர் தான் எனக்கு அடுத்து வான்புலிகளை பொறுப்பேற்கப் போகிறார்' என்று அறிமுகம் செய்தார். பின் இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் தேசியத்தலைவர் தங்கியிருந்த இடத்தைக் காட்டி, மிகவும் அக்க றையுடன் சம்பவங்களை விளக்கினார். எமக்கு யார்யாரை அறிமுகம் செய்து வைக்க வேண்டுமோ அவர்களையெல்லாம் அறிமுகம் செய்து வைத்து, உறுதுணை மிக்க தளபதியாக விளங்கினார்.

காட்டை மிகவும் அறிந்தவரான சொர்ணம் அண்ணா எமது ஓடு தளத்திற்கான பாதையாக இரணைமடுவுக்கு கிழக்காகவும், வட் டக்கச்சி பழைய கண்டி வீதியையும் தேர்ந்தெடுத்தார். இது சண்டை தொடங்கினால் நகர்விற்கு இலகுவானதாகவும் இருந்தது. ஓடுதளம் அமைக்கும் பணி நன்றாக நடந்து கொண்டிருந்தது. நான் மீண்டும்



வெளி வேலையாக அனுப்ப பட்டிருந்தேன். அப்போதுதான் துரோகி கருணாவின் பிளவு ஏற்பட்டது.

அத் துரோகச் செயலை முறியடித்து இயக்கத்தை மீட்டுவர கிழக் கிற்கு அனுப்பப்படும் பொறுப்பையும் தேசிய தலைவர் அவர்கள் சொர்ணம் அண்ணாவிற்கே வழங்கினார். எங்கெல்லாம் தேசியத் தலைவர் நெருக்கடியான சிக்கல்களுக்கு முகம் கொடுக்கின்றாரோ, அங்கெல்லாம் 55 (five five) இன் குரல் முழங்கும். அதுதான் சொர் ணம் அண்ணாவின் திறன்.

தன்னுடன் நின்ற சில போராளிகளை வான்புலியில் விட்டு விட்டு, ஒரு குறிப்பிட்ட போராளிகளுடனே திருகோணமலை சென்றார் சொர்ணம் அண்ணா. சில காலம் கடந்த பின், தேசியத் தலைவரது பணிப்பின் பேரில், வட்டக்கச்சி தளத்தில் வைத்து, சிறந்த கட்டமைப்பா கவிருந்த வான்படை என்னிடம் கையளிக்கப்பட்டது. தனது வாகனம் ஒன்றையும் எனக்குத் தந்த சொர்ணம் அண்ணா 'பறந்து காட்டுங்கள். உங்கள் காட்டில் மழை பெய்யும்' எனத் தட்டிக் கொடுத்தார். 'என்ன உதவியென்றாலும் அழையுங்கள். செய்து தருகிறேன்' எனக் கூறி, மீண்டும் திருகோணமலை சென்றார். அடிக்கடி எனையழைத்து நிலவரங்களைத் தெரிந்து கொள்வார்.

அன்ரன் பாலசிங்கம் அண்ணா இறுதியாக ஈழம் வந்த போது என்னை அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார் அவர்.

ஈழத்தின் பெரும் தளபதிகள் ஒன்று கூடிய இடத்தில் என்னையும் வான்புலிகளின் சிறப்பு தளபதியாக அறிமுகம் செய்து பெருமைப் படுத்தினார். நான் நன்றி உணர்வோடு அவரை நினைக்கிறேன்.

தமிழீழ வரலாற்றில் பெரும் கதாநாயகனாக திகழ்ந்த சொர்ணம் அண்ணாவுடன் பயணித்த அனைவரும் பெருமை கொள்ள வேண் டும். வாழ்வா? சாவா? என்று நம்தேசம் களம் கண்டு கொண்டிருந்த நாளில் தன் மூத்த மகளையும் தானே கொண்டு போய் தேசத்திற்கான பெரும் பணியில் இணைத்து விட்டு, அதே மிடுக்குடன் நடந்த வீரத் தந்தையாக இருந்தவர் சொர்ணம் அண்ணா. அப்பாவும், மகளுமாய் ஒரே காலக்கட்டத்தில் நாட்டுக்காய் பணி செய்து மடிந்த வீர காவியங் களை வடித்த புகழ் பூத்த பூமி எம் தாய் நிலம்.

எம் வீரத்தளபதிக்கும், மகளுக்கும் வீரவணக்கம். தம் குடும்பத்தை விடுத்து, தாய் மண்ணையும், தேசியத் தலைவரையும் நேசித்து முள்ளிவாய்க்காலிலும், தாய் மண்ணிலும் தமது இலட்சியப் பாதையில் வீர காவியமான தளபதிகளையும், போராளிகளையும் நெஞ்சில் நிறுத்தி நாம் ஒற்றுமையாய் உண்மைக்காய் குரல் கொடுப்போம்.

**(முன்னாள் வான்புலிகளின் சிறப்புத் தளபதியிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் ஆதாரத்துடன் எழுதப்பட்டது.)**

# குற்றுயிராய் தவிக்குது எங்கள் பூமி



பசுமை போர்த்த பூமி
ஆனாலும்,
கந்தக மணமும்
கருகிய உடல்களின்
தீய்ந்த வாடையும்
நிணமும் சதையும்
மனதை விட்டு அகல மறுக்கிறதே!!

குயில்களின் கூவல்
குண்டுகளின் ரீங்காரமாகவும்
விமானங்களின்
அச்சுறுத்தல்களாகவும்
காதில் விழுவதை
தவிர்க்க முடியவில்லை.

பாலைவனத்தின் நடுவில்
ஒட்டகத்தைத் தொலைத்த
நாடோடியின் மனதுபோல
உயிர் கிடந்து அடித்துக்கொள்கிறது.
ஆரவாரமாக வீசும் காற்றுக்கூட
'அய்யோ! அய்யோ!' வென
அலறுவதுபோல் ஒரு பிரமை.

பிணங்களால் போர்த்தப்பட்டது
எங்கள் பூமி!!
எடுத்து வைக்கும் ஒவ்வொரு
காலடி மண்ணின் கீழும்
யாரோ ஒருவரின் அல்லது பலரின்
கல்லறை கிடக்கிறது!!

எத்தனை பேர்க்கு பதுங்ககழியே
பிணக்குழி..!!
மூடாத குழிகளை மூடி விடுங்களேன்..
இனியாவது அவர்கள் உறங்கட்டும்!

கஞ்சிக்காக வரிசையில் நின்று
குண்டடிபட்ட பிஞ்சுகள்
உண்ண முதலே
உயிர்விட்ட காட்சிகள்
கண்ணெதிரே தோன்றி
கலங்கடிக்கும்!
ஆண்டுகள் கடந்தும்
இன்றுதான் நிகழ்வதுபோல்
உயிர்கிடந்து அடிக்கும்!!

எதுவுமே இங்கு மாறவில்லை!!
பட்டுப் பாதைகளும்
சொகுசு வீடுகளும்
விரைவு வண்டிகளும்
விருந்துகளும் களியாட்டங்களும்
எல்லாமே போலிதான்.
அவற்றின் அடியில்
குற்றுயிராய் தவிக்குது
எங்கள் பூமி.

நிலமெங்கும்
மனிதப் புதைகுழிகள்
காணாமல்ஆக்கப்பட்டோர்
பல்லாயிரம் பேர்.
அங்கங்கள் சிதைந்து
குடும்பங்கள் அழிந்து
எஞ்சிய உயிர்கள்
நடைப்பிணங்களாக!

இன்னமும் அடங்கவில்லை
கயவர்
கொலைவெறித் தாண்டவம்.
காற்றிலே கரைந்த வீரர் கனவுகள்
சிதைக்கத் துடிக்கிறார் இந்த
இனவெறிக் கிறுக்கர்.

காக்கை வன்னியர் குடைபிடிக்க
குந்து நிலத்தையும்
தட்டிப் பறிக்கிறார்!

ஏதிலிகளானோம் நாம்!
ஏமாளிகளாகவே
என்றும் இருப்போமா?

அன்று
எங்களுக்கென்று ஒரு
தாயகம் இருந்தது!
பகட்டுப் போர்த்தாத
வாழ்விருந்தது!
அங்கு
கலப்படமில்லா
மனிதர்கள் இருந்தார்கள்!
எங்களுக்காகவும்
உரிமைக்காகவும்
உயிர் தரத்
துணிந்தனர் இருந்தனர்!!

இழப்பைச் சொல்லி
சும்மா இருக்கலாமா?
கூழைக் கும்பிடு
போட்டுக் கிடக்கலாமா?
சிதறிக் கிடந்தால் சிங்களம் மிதிக்கும்
உணர்வுடன் எழுந்தால்தான்
உரிமைகள் கிடைக்கும்.
இனப்படுகொலை மாதமிது
ஒன்றுகூடவும் இதுவே நேரம்.
துணிவுடன் நிமிர்ந்து
தடைகளைத் தகர்ப்போம்!!

**பொழில்**

# நடைப்பயிற்சி அவசியமானது



தயவுசெய்து தினமும் நடந்து செல்லுங்கள். உங்கள் கால்களை இரண்டு வாரங்களுக்கு அசைக்கவில்லை என்றால், உங்கள் உண்மையான கால் வலிமை 10 வருடங்கள் குறையும்.

இதனால், முடியுமான போதெல்லாம் நடந்தே செல்லுங்கள்.

டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் பல கலைக்கழகத்தின் ஒரு ஆய்வு, முதியவர்கள் மற்றும் இளைஞர்கள், இரண்டு வாரங்கள் செயலற்ற நிலையில் இருந்தால் கால் தசை வலிமை மூன்றில் ஒரு பங்கு பலவீனமடையலாம் என்கிறது. இது 20-30 வருடங்கள் முதுமையடைவதற்கு சமம்.

எனவே நடந்தே செல்லுங்கள்.

கால் தசைகள் பலவீனமடைவதால், நாம் மறுவாழ்வு மற்றும் உடற்பயிற்சிகள் செய்தாலும், மீட்க நீண்டகாலம் பிடிக்கும். நடவுங்கள். அதனால், நடைபயிற்சி போன்ற வழக்கமான உடற்பயிற்சி மிகவும் முக்கியமானது.

நமது முழு உடல் எடையின் சுமையை கால்களே தாங்குகின்றன.

கால்கள் ஒரு வகையான தூண்கள், மனித உடலின் முழு எடையையும் அவை தாங்கும்.

ஒரு நபரின் எலும்புகளில் 50% தசைகளில் 50%, இரண்டு கால்களிலும் உள்ளன. நடந்தே செல்லுங்கள். மனித உடலின் மிகப்பெரிய மற்றும் வலுவான மூட்டுகள் மற்றும் எலும்புகளும் கால்களில் உள்ளன.

ஒரு நாளில் 10,000 அடிகள் நடந்தாக வேண்டும். வலுவான எலும்புகள், வலுவான தசைகள் மற்றும் நெகிழ்வான மூட்டுகள் உடலின் இரும்பு முக்கோணத்தை உருவாக்கி மனித உடலைச் சுமக்கிறது.

ஒருவரின் வாழ்க்கையில் 70% மனித செயல்பாடு மற்றும் ஆற்றல் எரித்தல் (burning the calories) இரண்டு கால்களால் செய்யப்படுகிறது. இது உங்களுக்கு தெரியுமா?

ஒரு நபர் இளமையாக இருக்கும்போது, அவருடைய தொடைகள் 800 கிலோ எடையுள்ள ஒரு சிறிய காரைத் தூக்கும் வலிமை கொண்டவை!

கால் உடல் நடமாட்டத்தின் (locomotion) மையம்.

இரண்டு கால்களும் சேர்ந்து மனித உடலின் 50% நரம்புகளையும், 50% இரத்தக் குழாய்களையும் கொண்டிருக்கிறது.



# நடைப்பயிற்சி அவசியமானது

50% இரத்தம் அவற்றின் வழியே பாய்கிறது. இது உடலை இணைக்கும் மிகப்பெரிய சுழற்சி வலையமைப்பு. எனவே தினமும் நடந்து செல்லுங்கள்.

கால்கள் மட்டும் ஆரோக்கியமாக இருக்கும் போது, இரத்த ஓட்டத்தின் வழமையான ஓட்டம் சீராகச் செல்லும். எனவே வலுவான கால் தசைகள் உள்ளவர்கள் கண்டிப்பாக வலுவான இதயத்தைக் கொண்டிருப்பார்கள்.

ஒருவரது வயது, பாதத்தில் இருந்து மேல் நோக்கித் தொடங்குகிறது. ஒரு நபர் இளமையில் இருப்பது போலல்லாமல் வயதாகும்போது, மூளை மற்றும் கால்களுக்கு இடையே நடைபெறும் ஆணைகள் பரிமாற்றத்தின் துல்லியம் மற்றும் வேகம் குறைகிறது. தயவுசெய்து நடந்து செல்லுங்கள்.

கூடுதலாக, எலும்பின் உரமான கால்சியம் என்று அழைக்கப்படுவது விரைவில் அல்லது பின்னர் காலப்போக்கில் இழக்கப்படும். இதனால் வயதானவர்கள் எலும்பு முறிவுகளுக்கு ஆளாகிறார்கள்.

வயதானவர்களில் எலும்பு முறிவுகள் தொடர்ச்சியான சிக்கல்களைத் தூண்டும். குறிப்பாக மூளை த்ரோம்போசிஸ் போன்ற ஆபத்தான நோய்கள்.

பொதுவாக வயதான நோயாளிகளில் 157, தொடை எலும்பு முறிவு ஏற்பட்ட ஒரு வருடத்திற்குள் இறந்துவிடுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

இவற்றைத் தவிர்க்க தவறாமல் தினமும் நடந்து செல்லுங்கள்.

கால்களுக்கு உடற்பயிற்சி செய்வது, 60 வயதிற்கு பிறகும் கூட தாமதமல்ல. நம் கால்கள் படிப்படியாக வயதாகிவிட்டாலும், நம் கால்களுக்கு உடற்பயிற்சி செய்வது வாழ்நாள் முழுவதும் வேலை.

எப்பொழுதும் கால்களை அடிக்கடி வலுப்படுத்துவதன் மூலம், ஒருவர் மேலும் வயதானதை தடுக்கலாம் அல்லது குறைக்கலாம்.

உங்கள் கால்களுக்கு போதுமான உடற்பயிற்சி கிடைப்பதற்கும், உங்கள் கால் தசைகள் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்வதற்கும் தினமும் குறைந்தது 30-40 நிமிடங்கள் நடக்க வேண்டும்.

# உச்சரிக்க முடியாமல் போன வார்த்தைகளில் அப்பா ஒன்று!

**கேணல் நாகேஷ் அவர்களின்**
**14 ஆண்டு நினைவாக மகள் எழுதிய கவிதை**



*வீர வணக்கம் அப்பா*
*தமிழீழ வரலாற்றில்*
*தன்னிகரில்லா தலைவன் அணியில்*
*புலியாகி போராடி*
*வெற்றிவாகை சூடிய*
*வீரவேங்கையே என் அப்பா*
*ஆனந்தபுர சமர் ஓய்ந்து*
*ஈரேழு வருடங்கள் இன்று*
*புறமுதுகிட்டு ஓடாது*
*சுழன்றுவரும் சூறாவளியாய்*
*பகைவர் நடுநடுங்க*

*களத்தினில் போராடி*
*இறுதிவரை சமர்கண்டு*
*இனவெறியரசின்*
*யுத்தமீறலில்*
*இரசாயன தாக்குதலால்*
*இம் மண்ணில் விதையானீர்*
*போரிட்டு வெல்ல*
*முடியாத வீரத்தின்*
*நாயகர்கள் நீங்கள்*
*மழலையான எமக்கு*
*அன்று எதுவும் புரியவில்லை*
*அழுகையுடன்*
*அப்பாவை தேடினோம்*
*கை பிடித்து வழி நட த்த*
*எம்முடன் நீங்கள் இல்லை*

*அள்ளி அனைத்து*
*அன்புடன் முத்தமிட்டு*
*கொஞ்சிபேசிடவும்*
*நீங்கள் இல்லை*
*உச்சரிக்க முடியாமல்*
*போன வார்த்தைகளில்*
*அப்பாவும் ஒன்றானதே என*
*கலங்கிய போதிலும் இன்று*
*உங்கள் நினைவில்*
*பெருமிதம் நிறைய உண்டு*
*உங்கள் நினைவுகளை*
*உங்கள் பாசத்தினை*
*அம்மாவின் அரவணைப்பில்*

*நித்தமும் கேட்டிருந்தோம்*
*நினைவுகளின் மீட்டல்*
*சுகமான போதும்*
*கர்வம் பொங்க உங்கள்*
*பிள்ளைகள் நாம் என்பதில்*
*பெருமிதம் எமக்கு*
*துரோகங்கள், சூழ்ச்சிகள்*
*சூழ்ந்த காலத்திலும்*
*தமிழீழ மண்ணையும்*
*தேசிய தலைவரையும்*
*நேசித்து*
*இறுதி வரை போராடி*
*வீரமண்ணிலே*
*விதையானீர்*

*தமிழீழ வரலாற்றில்*
*காவியமான என் அப்பாவே*
*கர்வத்துடன் தலைநிமிர்ந்து*
*வீரவணக்கம் செய்கின்றோம்*
*என்றோ ஒரு நாள்*
*உங்கள் இலட்சியம்*
*நிறைவேறும்*
*அன்று ஆன்மாவாய்*
*எம்மோடு நீங்களும் மகிழ்வீர்கள்*
*அதுவரை விட்ட உங்கள்*
*பணி தொடர*
*காலத்தின் நியதியில்*
*கட்டுண்டு காத்திருப்போம்*
*அன்று 05.04.2009*
*ஆனந்தபுர சமரில்*
*அப்பாவுடன்*
*காவியமான அனைவருக்கும்*
*அப்பாவுக்கும் எங்கள்*
*வீரவணக்கங்கள்.*

**அன்புடன் உங்கள்**
**மகள் தேனுஜா**

கொற்றவை



அங்கம்: 09

# வலை

கேசவன் வீடுதேடி வந்தது வியப்பாக இருந்தது ஆனந்தனுக்கு. அவர் சரியான ஆள் இல்லை. ஊரில் நடக்கும் பல பிரச்சனைகளில் இவரின் பெயரும் அடிபட்டிருக்கிறது. சாந்திக்கு அவரைக் கண்டதுமே முகம் இருண்டுவிட்டது. இப்படியான ஆட்களின் சங்காத்தமே இருக்கக்கூடாது என்ற எண்ணம் சாந்திக்கு.

‘‘இவருக்கு உடம்பு சரியில்லை... இப்ப வேலை வெட்டி எதுவும் வேண்டாம் எண்டு வீட்டில நிக்கிறார்.... என்ன விசயம்? தேடி வந்திருக்கிறியள்....’’ அவர் வந்த விசயத்தை அவிழ்க்க முன்னர் சாந்தி முந்திக்கொண்டா.

‘‘என்ன தங்கச்சி இப்பிடிச் சொல்லுறீர்...? அவரைப் பாரும்.... வருத்தக்காரன் மாதிரியே கிடக்கு? எழும்பி உலாத்த எல்லாம் காணாமப் போம் கிடக்க கிடக்க அம்மிப்போடும்...’’

கேசவனும் விடுவதாக இல்லை.

‘‘அண்ணை..! நீங்கள் விசயத்தைச் சொல்லுங்கோ....’’ முதன் முறையாக வாய் திறந்தான் ஆனந்தன்.

‘‘தண்ணிக்கு கிணறு வெட்டுறதை விட போர் அடிக்கிறது செலவு குறைவு.... நல்ல ஆழமாவும் அடிச்சால் நல்ல தண்ணீ வரும். கோப்பாயில ஒரு வேலை. அதுக்கு நீர் வந்து பொறுப்பா நிண்டு செய்ய வேணும்...’’

அவர் சொன்ன இடத்தைக் கேட்டதும் உயிரே நின்றுவிடும் போலிருந்தது ஆனந்தனுக்கு. அது துயிலுமில்லம் இருந்த இடம்.

எத்தனை மாவீரர்கள் விதைக்கப்பட்டிருக்கினம்... அந்த இடத்தில ஏதோ வேலை செய்யப் போறாங்கள். துயிலுமில்லத்தைத் தோண்ட என்னைக் கூப்பிடுறான்..... அங்க வந்து வேலைசெய்ய எல்லாரும் ஓம்பட மாட்டினம்.... உள்ளுக்கு இருந்தாக்களையும் வேலைக்கு எடுத்தால் மற்றாக்களும் வருவினம் எண்டு கணக்குப் போட்டிருக்கிறாங்கள்.

ஆனந்தனுக்கு கோபத்தில் உடல் நடுங்கியது... கண்கள் சிவந்து போயின....

‘‘நீங்களெல்லாம் மனுசர்தானோ...! எப்பிடி கூசாமல் இந்த வேலை செய்ய முடியுது...? இயக்கம் இருந்த காலத்தில அவைக்குப் பின்னால திரிஞ்சியள்.... இப்ப புதைகுழிகளையும் தோண்ட வெளிக்கிட்டிட்டியளோ....?

ஆத்திரத்துடன் குரலை உயர்த்திய ஆனந்தனை இடைமறித்தது சாந்தியின் குரல்.

‘‘கெதியில வளவுக்கிளால வெளிக்கிடும்...! நிண்டா என்னத்தால அடிப்பன் எண்டு எனக்கே தெரியாது... துணிச்சல்தானே உமக்கு?’’





# வலை

கேசவன் அரண்டு போனார். அவர் இதை இந்த வீட்டில் எதிர்பார்க் கவில்லை. அவசர அவசரமாக வளவுக்கு வெளியில் விரைந்தார். போகுமுன் படலையடியில் நின்று,

''என்னைப் பகைச்சுப் போட்டியள்.... நான் ஆரெண்டு உங்களுக் குத் தெரியாது...'' என்று காட்டமாக ஆரம்பித்தவர், சாந்தியின் கையி லிருந்த விளக்குமாறைப் பார்த்ததும் வசனத்தை முடிக்கவில்லை. விரைந்து மறைந்தார்.

''சனத்தின்ர காணியள ஆமிக்காரன் அடாத்தாப் பிடிக்க உவன் தான் உதவி எண்டு ஊருக்குள்ளை கதைக்குதுகள்.... இப்ப சனத்தின்ர தோட்டக் காணியளைப் பிடிச்சு அதில ஆமிக்குப் பண்ணை வைச்சுக் குடுக்க ஓடுப்பட்டுத் திரியிறாராம்.... இன்னும் ஒரு நிமிசம் இங்க நிண்டிருந்தால்.... சத்தியமா ரெண்டு போட்டிருப்பன்....''

சாந்தியின் ஆவேசம் ஆனந்தனுக்கு பெருமிதமாக இருந்தது. வெண்ணிலாவை பாடசாலைக்கு தனியாக அனுப்புவது சரியில்லை என்று பட்டது. பாடசாலை வரைக்கும் வெண்ணிலாவுடன் போன ஆனந்தன் அப்படியே மண்டிக்குப் போனான். அங்கு வேலை செய்பவர் கள் பலரும் கூடிக்கூடி நின்றார்கள். அந்த இடம் பரபரப்பாக இருந்தது. என்னவாக இருக்கும்....?

''வந்திட்டீரோ...!! சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்கிறீர்... பக்கத்தில ஒரு பிரச்சனை. வேலை செய்யிறவை எல்லாரும் கொஞ்ச நேரம் பதாகை பிடிச்சு எதிர்ப்புக் காட்டோணும்..'' மண்டிக்காரர் சொன்னார். அடுத்த தெருவில் இருந்த தெருவோர அம்மன் கோவி லில் அம்மன் சிலை சேதப்படுத்தப் பட்டிருக்கிறது.... அங்கு புதிதாக ஒரு புத்தர் சிலை முளைத்திருக்கிறது. அந்தக் கட்சிக்காரரும் மண்டிக் காரரும் ஒண்டுக்குள்ள ஒண்டு எண்டபடியால் அவை சொன்னபடி கண்துடைப்புக்கு ஒரு போராட்டம் செய்யப்போகினம்.

ஆனந்தன் சமய நம்பிக்கைகள் இல்லாதவன் இல்லை... அதேசமயம் தன்னுடைய மதம்தான் சரி என்று மதவெறி பிடித்தவனும் இல்லை. ஆனால், தமிழனின் பண்பாடும் கலாசாரமும் இதில் பின்னிப் பிணைந்து இருக்கின்றனவே..... தவிரவும் தமிழனின் குடிப்பரம்பலை திட்டமிட்டு அழித்து, எங்கள் தாயக பூமியில் அரங்கேறும் அத்துமீறல் களை தடுக்க வேண்டும் என்று தவியாய்த் தவிப்பவன் ஆனந்தன்.

எனவேதான் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் முழுமனதுடன் கலந்து கொண்டான் அவன். வெறுமனே பார்வையாளர்களாக பதாகை ளுடன் நின்றவர்களையும் ஊக்குவித்து கோசம் போடச் செய்தான். மண்டியில் இருந்து போனவர்களைத் தவிர ஊரவையிலிருந்து சிலர் மட்டுமே எதிர்ப்பைக் காட்ட வந்திருந்தனர். ஊருக்காக, தமது நாளாந்த வேலைகளை விட்டுவரத் தயாராக அவர்கள் இருக்கவில்லை. அயலட் டையில் இருந்தவர்கள் கூட கலந்துகொள்ளவில்லை. தமது வீட்டிற்கு பாதிப்பில்லை என்று எல்லோரும் ஒதுங்கினால் எதிரிக்குத்தானே கொண்டாட்டம்.

வழியில் வந்த பேரூந்தில் இருந்தவர்கள், வழியால் சென்றவர்கள் எல்லோரையும் மறித்து, விளக்கி எதிர்ப்புக் கூட்டத்தில் இணைய வைத்தான் அவன். அக்கம்பக்கத்து வீட்டுக் கதவுகளைத் தட்டி அவர் களையும் வீதியில் இறங்க வைத்தான். முதலில் தமக்கு ஏதேனும் வந்துவிடும் என்று பயந்தவர்கள் பிறகு ஆளையாள் பார்த்து, கொஞ்ச நேரந்தானே என்ற ஒரு துணிச்சலுடன் திரண்டு விட்டார்கள்,

'பதாகைகளுடன் நின்றால் என்ன, எதிர்ப்பைக் காட்டினால் என்ன' என்று புத்தர் சிலையைச் சுற்றி வேலியமைக்க வந்தவர்கள் இவ்வளவு கூட்டம் கூடும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர்களுக்கு காவலாக வந்திருந்த இராணுவத்தினருடன் மக்களுக்கு முறுகல் ஏற்பட்டுவிட் டது. இறுதியில், மக்களின் கொந்தளிப்பைத் தாங்கவியலாமல் புத்தர் சிலையையும் தூக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள் அவர்கள்.

மக்களின் தொடர்ச்சியான போராட்டம், அவர்களின் கடுமையான எதிர்ப்பு என்பன இந்த நேரத்தில் அவசியம். காப்பவர்கள் இல்லாத நிலையில், மக்களின் ஒன்றிணைந்த போராட்டங்கள்தான் எங்கள் மண், பாரம்பரியம், கலாசாரம் பறிபோவதை கொஞ்சமாவது தடுத்து நிறுத்தும் என்பதில் ஆனந்தனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. இந்தச் சம்பவம் அதற்கு ஒரு எடுத்துக்காட்டு. சும்மாவா சொன்னார்கள் 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்று.

வாயெல்லாம் பல்லாக ஆனந்தனை வரவேற்றார் மண்டிக்காரர். இருக்காதா பின்னே? மக்களைத் திருப்திப்படுத்தவென, மண்டிக்காரர் மூலம் ஒரு சாட்டுக்குத்தான் எதிர்ப்பைக் காட்ட வெளிக்கிட்டது அந்தக் கட்சி. இப்போ எதிர்பாராத வெற்றி. அதுவும் அந்தக் கட்சி செய்ததாகத் தானே மக்கள் நினைப்பார்கள்? இந்த நேரத்தில் அவை எவற்றையும் கருத்தில் எடுக்கவில்லை ஆனந்தன். ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும்.. அவ்வளவுதான்.

சுமைகளைத் தூக்குவதும் இறக்குவதுமாக முறிந்த வேலை அன் றைக்கு. அலுத்துச் சோர்ந்து வீடு வந்தாலும் எதையோ சாதித்த திருப்தி அவனுக்கு.

''கன காலத்துக்குப் பிறகு இப்பதான் உங்கடை முகத்தில இப்பிடி ஒரு திருப்தி தெரியுது.'' சொல்லிச் சொல்லி சந்தோசப்பட்டாள் சாந்தி.

அடுத்த இரண்டு வாரங்களும் சொல்லக்கூடிய வகையில் பெரிதாக எந்த வேலையும் வரவில்லை. வளவுக்குள் இருந்த வீட்டுத் தோட் டத்தை சீரமைப்பதில் பொழுதைக் கழித்தார்கள் சாந்தியும் ஆனந்தனும். தோட்டத்தில் தேவைக்கும் அதிகமாக மரக்கறி விளைந்திருந்தது. அக்கம்பக்கத்தில் இருந்தவர்களும் வாங்கிக் கொண்டார்கள். சாந்தி கெட்டிக்காரி. அநாவசியமான செலவுகள் செய்யமாட்டாள். வீட்டில் இருக்கும் பொருட்களை வைத்து சிறிதளவு வருமானமும் கிடைத்தது.

வீட்டின் தெற்குப்பக்க வேலி விழும் தறுவாயில் இருந்தது. வீட் டின் தென்னோலைகளை சாந்தி வீணாக்கியதே இல்லை. வேலியை மீளமைக்கவும் விற்பனைக்குமாக போதியளவு கிடுகுகள் வீட்டில் இருந்தன.

''எங்கையப்பா..! எல்லாரும் சுத்து மதில் வீடு எண்டு இருக்கினம். யாருக்கு இப்ப கிடுகு வேணும்? அங்கினை தோட்டத்தில கொட்டி லுக்கு எண்டு ஆரும் வாங்கினால்தான் உண்டு...'' அங்கலாய்ப்புடன் சொன்னாள் சாந்தி.

''இதுக்கேன் கவலைப்படுறாய்? எல்லாரும் பழசை மறந்து புது மையில திரியினம்... ஆர் இப்ப வீடுவழிய கிடுகு பின்னுகினம்?





# வலை

எங்களைப் போல ஒரு கொஞ்சப் பேர்தான் அதால, ஆருக்கும் கிடுகு தேவையெண்டால் இங்கைதான் ஓடி வருவினம்.... பயப்படாதை!''

''ஆனாலும் ஒரு விசயம் பாருங்கோ அப்பா! நாங்கள் ஒரு சின்ன இடத்துக்கை தோட்டம் போட்டு... கொஞ்ச வருமானமோ வருது? நாலைஞ்சு கோழியள்தான் வேண்டி விட்டது.. இப்ப எத்தினை நிக்குது? உதுகளுக்கு பராமரிப்பும் இல்லை.... வீட்டுத் தேவைக்கு ஒரு ஆடு. பால் தருது.... நாங்களே இப்பிடி சாப்பாட்டுக்கு பஞ்சமில்லாம இருக்கேக்குள்ள ஏன் இந்தச் சனம் பெரிய பெரிய காணியளையும் மோட்டர் வசதியளையும் வைச்சுக்கொண்டு சும்மா இருக்குதுகள்? காசை கடையில குடுத்து கரியாக்குதுகள்?''

''தான்தான் உழைக்கேக்கதான் காசின்ரை அருமை தெரியும் சாந்தி! இது யாரோ உழைச்சு வெளிநாடுகளில இருந்து அனுப்புகினம். சனம் சுயபொருளாதாரம் எண்டதையே மறந்து ஒரு சோம்பேறி வாழ்க்கை வாழுதுகள். பார்...! இதாலதான் இங்க பிள்ளையள் எல்லாம் குட்டிச் சுவராய்ப் போய்க் கிடக்குதுகள். ஒரு உடல் உழைப்பில்லை.... எந்தப் பொறுப்புமில்லை.... ஓடருக்கு சாப்பாடு எடுக்கிறதும், பார்ட்டியளும், சுற்றுலாக்களும்..... எண்டு, ஏன் சுத்து மதிலுக்கு பெயின்ற் அடிக்கிறதில கூட போட்டி.... பயிர் வைச்சா வீட்டின்ர அழகு கெட்டிடுமாம்.... அதாலதான் அழகழகா பூங்கண்டுகள் வைக்கினம் இவை கோழி வளர்ப்பினமோ...?''

''அதுதானே..! உந்தச் சண்டையான சண்டைக்கையே நாங்கள் சாப்பாடு இல்லாமல் கிடக்கேல்லை....'' சாந்தி பெருமூச்சு விட்டாள்.

''கிட்டடியில வெளிநாட்டில இருந்து தெரிஞ்ச ஒருத்தர் வந்திருந்தவர்... அங்க இடமில்லாமல் சாடியள்ள மரக்கறி வளக்கினமாம்... வாங்கிற சாப்பாடு செலவும் மற்றது உடம்புக்கும் கூடாது எண்டு வீட்டில சமைக்கிற சாப்பாடுதானாம் அதிகம். 'அங்கை தொட்டதெல்லாத்துக்கும் காசு இங்க வீடு, தண்ணி, ஹீற்றர் எண்டு ஒரு செலவும் இல்லை.... சனம் தாம்தூம் எண்டு செலவழிக்குதுகள்.... ஒரு பொறுப்புமில்லை.... சனம் முழுக்க முழுக்க மாறீற்றுது..... நாட்டைப் பாக்க ஓடி வந்தால் இப்ப வெறுப்பாவல்லோ கிடக்கு' எண்டு மனம் நொந்து கதைச்சவர்... உண்மைதானே..'' ஆனந்தனும் ஆதங்கப்பட்டான்.

பாடசாலை விட்டு வந்த வெண்ணிலா ''பெற்றோர் ஆசிரியர் கூட்டம் வைக்கப்போகினமாம்'' என்று சேதி சொன்னாள்.

''என்ன இந்த நேரத்தில.... திடீரெண்டு? வழமையா இப்ப வைக்கிறேல்லையே..?'' இது சாந்தியின் சந்தேகம்.

''தெரியேல்லை அம்மா! ஓஃபிசில ஏதோ வாக்குவாதம் நடந்தது எண்டு சொன்னவை.''

'பிரச்சனை என்னவோ உருவாகி இருக்கவேண்டும் அல்லது ஏதோ வெளி வந்திருக்க வேண்டும்' ஆனந்தனுக்கு யோசனை ஓடியது. பின்னேரப் பொழுது... படலையடியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நின்றது. ஒருநாளும் வராத டானியல் அண்ணர் வந்திருந்தது ஆச்சரியமாக இருந்தது. அவர் இறங்கி உள்ளே வரவில்லை....

யார் என்று எட்டிப் பார்த்த சாந்தியைப் பார்த்து,

''பிள்ளை...! ஒரு வேலை. ஆனந்தனை ஒருக்கா கூட்டிக்கொண்டு போறன்.'' என்றார்.

அவசரமாக சேட்டை மாற்றிக்கொண்ட ஆனந்தன் மறு பேச்செதுவும் பேசாமல் பின்னிருக்கையில் ஏறிக்கொண்டான். மோட்டார் சைக்கிள் புறப்பட்டது.

**தொடரும்....**



# முள்ளிவாய்க்கால் கஞ்சி






































# ‘மே 18’ பெரும் துயர நாளின் கண்ணீரில் நனைந்த முள்ளிவாய்க்கால்











